12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 4—2—1979 | இதழ் 20

தமிழை அழிப்போரை-
தாய் தடுத்தாலும் விடோம்!

நான் அடிக்கடி எடுத்து விளக்கியதைப்போல் இந்தியை எதிர்க்க நாம் உத்திரப் பிரதேசத்திற்கோ, பீகாருக்கோ, மத்திய பிரதேசத்திற்கோ படை கொண்டு செல்லவில்லை ஆனால் இந்தி தமிழகத்திலே நுழைந்து நம்மை ஆதிக்கம் செலுத்த வருகிற நேரத்தில் அதை உள்ளே நுழையாதே என்று தடுக்கிறோம்; எதிர்க்கிறோம்.

இந்தி அவர்களுடைய மாநிலத்தில் வளர்வது, வளர்க்கப்படுவது நம்மால் எதிர்க்கப்படக் கூடிய ஒன்றல்ல. ஆனால் அது மற்ற மாநில மக்களை அடிமைப் படுத்துகிற அளவிற்கு ஆதிக்க மொழியாக ஆகிவிடுமேயானால், இந்தி பேசாத மாநில மக்கள் குறிப்பாக தமிழ் நாட்டு மக்கள் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழுக்கு இலக்கணம் கண்டனர்கள். —இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகத்திற்கு அறநெறி கூறுகிற திருக்குறளைக் கண்டவர்கள் — அகம் — புறம் என்று அழகுத் தமிழ் இலக்கியங்களைக் கண்டவர்கள், முச்சங்கம் வளர்த்தவர்கள். முத்தமிழைப் பாதுகாத்தவர்கள், மும்முரசு கொட்டியவர்கள் மூவேந்தர் தலைமையிலே வாழ்ந்தவர்கள் இன்று மூலையில உட்காரக்கூடிய நிலை ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காகத்தான் தமிழ் எங்கள் உயிருக்கு நேர். அந்தத் தமிழை அழிக்க யாராவதுமுற்படுவார்களானல் என் தாய் தடுத்தாலும் விடேன் என்ற சூளுரையை மேற்கொண்டு அதற்கென கிடைப்பது சிறைச்சாலையாக இருந்தாலும், சித்திரவதையாகஇருந்தாலும், தூக்குமேடையாக இருந்தாலும், அந்தக் களச்சாலை நாங்கள் வாழ்த்தும் பெறுவோம் என்று முழக்கமிடுகிறவன்தான் மானம் உள்ள தமிழன், மறத் தம்ழன.

ஜன 26 அன்று சென்னையில் நடைபெற்ற கருஞ்சட்டை ஊர்வலத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் கையில் கறுப்புக் கொடி ஏந்தி வந்த காட்சி!

எம். ஜி. ஆரை எப்படி நம்புவது?

எம். ஜி. ஆரை நம்பி இவ்வளவு பெரிய பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களை நான் காட்டிக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரை எப்படி நம்ப முடியும்? இந்தித் திணிப்பு இல்லை என்கிறார் ஒரு நாள்.

ஆமாம்! இருக்கிறது என்கிறார் மறு நாள்.

தேசாய் சொன்னது சரி என்று ஒத்துக்கொள்கிறார் ஒரு நாள்.

இந்தியாவில் உள்ளவர்கள் இந்தியைப் படித்தால் தான் தேசபக்தர்கள் என்று தேசாய் சொன்னவுடன் இவர் மாநாட்டுத் தலைப்பையே மாற்றிவிட்டார். இவரை நம்பி நாங்கள் எப்படி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த முடியும்?

எங்களுடைய முறை வேறு. வேண்டுமானால் அவர்களும் நடத்தட்டும்; நாங்களும் நடத்துகிறோம். அதைப் போல ஒவ்வொரு கட்சியும் இந்தியை எதிர்க்கிற வகையில் தங்கள் தங்கள் போராட்டங்களை நடத்தட்டும்.

கோவை மாநாட்டில் அ.தி.மு.க.வினர் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மொழிப் பிரச்சினை குறித்துத் தமிழ்நாட்டு மக்களிடம் 'Referendum' 'பொதுவாக்கெடுப்பு' நடத்தப் போகிறார்களாம். இது யாருக்கு எதிராக அல்லது யாருக்கு ஆதரவாக நடத்துகின்ற வாக்கெடுப்பு?

கொஞ்சம் சிந்தித்தால் அது எவ்வளவு பெரிய ஆபத்தான யோசனை என்று அரசியல் தெரிந்தவர்களுக்குப் புரியும். 1968-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தைச் சட்டசபையிலே நிறைவேற்றியிருக்கிறார். அதில் தமிழை மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக. அதைப்போல எல்லா தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக: அதுவரையில் தொடர்ந்து ஆங்கிலம் மட்டுமே இருக்கும் நிலைமையை உண்டாக்குக என்பது அத்தீர்மானம்

அந்தத் தீர்மானத்தோடு இணைந்த தீர்மானம் தான் தமிழ்நாட்டில் இரு மொழித் திட்டம் என்ற தீர்மானம். அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு இன்று எம். ஜி. ஆர். மக்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்துகிறேன் என்றால் அது சரிதானா? என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்களின் போராட்ட வரலாற்றில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு கட்டம். அதற்கு வலுவளிக்கும் வகைகளில்தான் அன்று அண்ணா சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தைச் சந்தேகப்படுவதைப்போல் இன்று பொதுமக்கள் வாக்கெடுப்பை (Referendum) நடத்துவோம் என்பது எந்த வகையைப் பொறுத்தது என்பது எனக்குப் புரியவில்லை

தென்னரசு பேசும்போது ஒன்று குறிப்பிட்டார். சென்னையில் நடைபெற்ற கறுப்புக்கொடி போராட்டத்தில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டார்கள். அதைப்போல கோவையில், நெல்லையில், மதுரையில், சேலத்தில், தஞ்சையில், திருச்சியில், சிற்றூர்களிலெல்லாம், குக்கிராமங்களிலெல்லாம், பட்டிதொட்டிகளிலெல்லாம் ஆயிரக்கணக்கானோர் கறுப்புச்சட்டை அணிந்து இந்தி ஆதிக்கம் ஒழிக என்று முழக்கமெழுப்பினர். அந்தக் கறுப்புச்சட்டை அணி பெற்றவெற்றிமுதல் கட்ட வெற்றி. நமது உணர்வை அகில இந்தியாவிலிருக்கிற இந்தி பேசாதோர் உணரும் வகையில் நாம் பெற்ற வெற்றி, அந்த வெற்றிக் கனியோடு நான் வந்திருக்கிறேன். அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி என்று தென்னரசு சொன்னார்.

ஆனால், உண்மையான மகிழ்ச்சி, உளமார்ந்த மகிழ்ச்சி தமிழ்நாட்டிலுள்ள அனைவருக்கும் ஏற்பட வேண்டுமானால், இந்தி ஆதிக்கம் தொலைந்து நம்முடைய தமிழ் மத்திய அரசில் ஒரு ஆட்சி மொழியாக ஆனது என்று அறிவிக்கப்படுகிற நாள்தான் நாம் உண்மையாக மகிழ்ச்சி அடைகின்ற நாளாகும்.

அந்த நாளில் நான் கல்லறையில் இருந்தால் கூட, கல்லறைக்குள் இருக்கிற என் பிணம் கூட அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும். அந்த நாளைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தைக்கப்பட்ட கறுப்புச்சட்டைகளெல்லாம்வீணாகி விட்டனவென்று சிலர் சொன்னதாக இங்கு சொன்னார்கள்.

ஒரு நாளைக்குத்தான் போட்டுக் கொண்டோம். அதற்குப் பிறகு மடித்து வைத்துவிட்டோமே! கருஞ்சட்டை மாநாடு நடத்தவேண்டும் என்று கோபால்சாமி குறிப்பிட்டார் நண்பர் தென்னரசு கூட இங்கே குறிப்பிட்டார். ஆனால் கருஞ்சட்டையை பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். நான் போட்டு முப்பதாண்டு காலமாகிறது 1949-ஆம் ஆண்டு கழற்றிய சட்டையை கதிரவன் குறிப்பிட்டதைப்போல இப்போது போட்டுக்கொண்ட நேரத்தில் எனக்கு எத்தனையோ உணர்வுகள், எத்தனையோ எண்ணங்கள், எத்தனையோ பழைய கால நிகழ்ச்சிகள் பசுமையாக நினைவுக்கு வந்தன. அதைப் போட்டுக் கொண்டதால் எத்தனை இடத்தில் தாக்கப்பட்டோம், ஏசப்பட்டோம், அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டோம் என்ற நிலைமைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. அந்தச் சட்டையைப் போட்டுக் கொண்டதும் ஒரு வீரன் உடம்புக்கு அணிந்து கொண்டிருக்கிற கவசத்தைப்போல எனக்குத்தோன்றியது. நான் ஒன்றும் திடகாத்திரமன்னவனல்ல. இருந்தாலும் அந்தச் சட்டையைப் போட்டதும் என்னையறியாமல் என் நெஞ்சு விம்மியது; தோள்கள் துடித்தன. காரணம் நமது போர்க் குரல் நமது நெஞ்சில் நிலைத்திருக்கிற காரணத்தினால்தான். ஏனென்றால் கருஞ்சட்டை ஊர்வலம், கறுப்புக்கொடி நிகழ்ச்சி நாம் தமிழ்ச் சமுதாயத்துக்குத் தேடித்தந்த முதல் வெற்றியாகும். அடுத்த வெற்றிக்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

தலைவர் கலைஞர்

(செங்கோட்டைப் பொதுக்கூட்டத்தில்)

சோதனைகளைச் சந்திக்கும் சாதனைத் தலைவர்

'இருப்பதோ ஓர் உயிர்— அது போகப்போவதோ ஒரு முறைதான். அது நல்ல காரியத்திற்குத்தான் போகட்டுமே' என்று பேரறிஞர் அண்ணா ஒரு முறை கூறினார். அந்த இலட்சிய கீதத்தை என்றும் உள்ளத்தில் இசைத்துக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையின் தன்னேரில்லாத் தலைவர் கலைஞர் பொது வாழ்க்கையில் சந்தித்து வரும் ஆபத்துக்கள் ஒன்றல்ல இரண்டல்ல.

இந்தி மொழி ஆதிக்கத்தால் தமிழுக்கு வந்து கொண்டிருக்கும் ஆபத்தை தடுத்து நிறுத்த தன் இன்னுயிரையே தீயிக்கு இரையாக்கிக் கொண்ட தியாகி சிவலிங்கத்தின் முதலாண்டு நினைவு நாள்.

எந்த மண்ணில் தன் இரத்தத்தைச் சிந்தி தன் தேகத்தைப் பொசுக்கிக்கொண்டாரோ சிவலிங்கம் அந்தமண்தானே கோடம்பாக்கம் அண்ணா நகர்

மாலை ஏழு மணி. கூட்டம் நடைபெறும் இடம், இருவண்ணக்கொடி பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கிறது. தியாகி சிவலிங்கத்தின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேச 'முரசொலி' அலுவலகத்திலிருந்து அழைத்து வரப்படுகிறார் கலைஞர்

கொடி கட்டி கூட்டம் நடத்தி கட்சியை வளர்த்துத் தலைவராக வளர்ந்தவர் அல்லவா அவர்!

தொண்டரோடு என்றும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். தொண்டன் தியாகி சிவலிங்கத்தின் திருவுருவப் படத்தைத் திறக்கப் போவதில் கொள்ளும் பெரு மகிழ்ச்சியில் திளைத்தவாறே அந்த இடத்திற்கு வந்தடைகிறார்.

நிகழ்ச்சி தொடங்குகிறது திருவுருவப்படத்தைத் திறந்து வைக்க மூடியிருந்த துணியை விலக்குகிறார் படத்தைச் சுற்றிச் சிறு சிறு விளக்குகளை இணைத்திருந்த மின்சாரக் கம்பியில் கோளாறு. அந்த 'ஒயரில்' துணியை விலக்கும் போது கை படுகிறது திடீரென்று மின் தாக்குதலால் கலைஞர் தூக்கி எறியப் படுகிறார். அங்கே கூடியிருந்த என்போன்ற தோழர்கள் பதறிப் போய்விட்டோம்: தோழர்கள் வி. பி, அகிலன், க. துரை இரா. ஆனந்தன் ஆகியோருடன் நானும் அருகே ஓடிச்சென்று தரையில் விழுந்தவரை தூக்குகிறோம்.

பேச்சு மூச்சு இல்லாத மயக்க நிலையில் இருக்கிறார், 'கோ'வென்று கதறி அழுகிறோம். ஒருவர் தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளிக்கிறார். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கண்களைத் திறக்கிறார்

அங்கு இருந்தோர்க்கு அப்போதுதான உயிரே வந்தது. கலைஞரை ஏற்றிக்கொண்டு கார் கோபாலபுரம் சென்று அடைகிறது. அந்தச் செய்தி காட்டுத் தீயென நகரம், நாடு எங்கும் பரவுகிறது. கூட்டம் ஆயிரக் கணக்கில் கூடிவிட்டது வீட்டில்

கண்விழித்து சரியாகப் பேசத் தொடங்கிய கலைஞர் எங்களைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி, 'நிகழ்ச்சி முடிந்துவிட்டதா? என்பது தான்.

"தியாகி சிவலிங்கம் நினைவு நாள்: நீங்கள் அவருடைய திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துவிட்டீர்களே என்றேன்.

'அப்படியா' என்று கூறியபடி உள்ள நிறைவோடு ஓய்வு எடுத்துக்கொண்டார் அன்றைய தினம் மட்டும்.

சா. க.

கலைஞரின் அரசியல் வரலாறு எதிர்ப்போடே, பகைவர்களின் தாக்குதலுக்கிடையேதான் படைக்கப்பட்டு வந்திருக்கிறது.

எத்தனையோ சம்பவங்கள் அவரது அரசியல் வாழ்வில் நடைபெற்று வருகின்றன. அதையெல்லாம் பொருட்படுத்தாத பேராண்மையாளர்

1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல். இருபதாண்டுக் காலம் ஏகபோகமாக நாட்டை ஆண்டு வந்த காங்கிரசுக் கட்சியை தேர்தல் களத்தில் கழகக் கூட்டணி சந்திக்கின்றது

புதிய வரலாற்றைப் படைத்த விருகம்பாக்கம் மாநில மாநாட்டில் அண்ணா அறிவிக்கிறார்.

"சைதாப்பேட்டைத் தொகுதியில் பதினேழு இலட்சம் நிற்கிறது. ஆம் என் தம்பி கருணாநிதி நிற்கிறான்'' — —அண்ணா கூறுகிறார் இப்படி!

இந்தச் செய்தி எல்லாச் செய்தித் தாள்களிலும் இடம் பெறுகிறது. சில பத்திரிகை பெட்டிச் செய்தியாகவும் போட்டு மகிழ்ந்தது.

ஆனால் அந்த மகிழ்ச்சி காங்கிரசுக்காரர்களில் சில பேருக்கு கசப்பை உண்டாக்கியது. தேர்தல் பணியில் வீரனாக விளங்கும் கலைஞரைத் தேர்தல் தோற்கடிக்க முடியாது என்று எண்ணிய கயவர்கள் சிலர், அவரை ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டிக் கொண்டனர்.

தமிழகம்முழுதும் தேர்தல் சூடுபிடித்த நேரம். அண்ணாவும், கலைஞரும் தமிழகம் முழுவதும் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தபடி உள்ளனர். இடையிலே கலைஞர் தொகுதியிலுள்ள வாக்காளர்களைச் சந்திக்கச் செல்கிறார்.

நிகழ்ச்சி நடந்த அன்று அண்ணாவும் கலைஞரும் தேர்தல் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த தோழர்களைத் தேர்தல் பணிமனைகளில் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். கோடம்பாக்கத்திலுள்ள பணிமனைகளுக்கு அண்ணாவும், கலைஞரும் வந்துவிட்டுப் புறப்படுகின்றனர்.

கலைஞரும் அவரோடு சில தோழர்களும் கோட்டூர்புரம் நோக்கி கார் மூலம் செல்கிறார்கள்

கொள்கையோடு கொள்கையை மோதவிட்டு வெற்றி காண முடியாத கோழைகள் கொள்கை வீரனைத் தேர்தல் களத்தில் சந்திக்கச் சக்தியற்ற கயவர்கள் கத்தி அரிவாளோடும் குண்டர்களைச் சேர்த்துக் கொண்டு கலைஞரைக் கொல்லப் பின் தொடர்ந்தனர்.

கோட்டூரில் கலைஞரின் கார் நுழைந்ததும் பின் தொடர்ந்து வந்த காங்கிரசுக் குண்டர்கள் காரை மடக்கினர் காரோட்டியின் திறமையாலும் கலைஞரின் சமயோசித புத்தியாலும் குண்டர்களின் கண்களிலிருந்து மறைந்து விட்டனர்.

ஒரு வீட்டிலே புகுந்து கலைஞர் மறைந்து கொண்டார். குண்டர்கள் எவ்வளவோ முயன்றனர் அவரை எப்படியும் கொலை செய்து விடுவது என்கிற வெறியோடு அலைந்தனர் ஊர் மக்கள் அன்று கலைஞரின் உயிரைக் காப்பாற்றுவதில் காட்டிய ஆர்வம், அக்கறை, மனிதாபிமானம் ஆகியவை மறக்க முடியாத ஒன்றாகும்.

அன்றும் கலைஞர் அவர்கள் அந்தக் கொலை வெறி பிடித்த குண்டர்களின் தாக்குதலிலிருந்து தப்பியது தமிழக மக்களின் நல்லெண்ணம் தான் துணை நின்றது போலும்!

கழகத்தலைவர் கலைஞருக்கு சும்மா இருப்பது என்பது பிடிக்காத ஒன்று, நூல்களைப் படிப்பதோ கட்டுரை தீட்டுவதோ மேடையிலே பேசுவதோ இவற்றில் ஒன்றையாவது செய்துகொண்டிருந்தால் தான் அவருக்குத் தெம்பு பிறக்கும்.

எந்தப்பணியும் செய்யாது அமைதியாக இருப்பது என்பது அவரது அகராதியில் இல்லாத ஒன்று.

சென்ற கிழமை நெல்லை, குமரி மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்

[தொடர்ச்சி 11-ம் பக்கம்]

இந்தி எதிர்ப்புப் போராட்டமும்

இரா. நரேந்திரகுமார்

கோவையில் 'இந்தி எதிர்ப்பு மாநாடாக' அறிவிக்கப்பட்டு 'இந்தித்திணிப்பு எதிர்ப்பு மாநாடாகப்' பெயர் மாற்றம் பெற்று, 'வீரவணக்க நாளாக' உருப்பெற்று அ. தி. மு. க 'மாணவர் மாநாடாக' நடந்தேறிய மாநாட்டில் புரட்சியார் பொருமியிருக்கிறார். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் முடிவுக்கேற்ப சட்டமன்றத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் கொணரப்படுமென்று அறிவித்ததன் பின்னும் கறுப்புக்கொடி போராட்டமா? குடியரசு நாளின்போது கொதிப்பைத் தருகிற செயலா? என்றெல்லாம் சாடியிருக்கிறார். வசை பாடியிருக்கிறார். கறுப்புக் கொடி ஊர்வலத்திற்குத் தடைவிதித்தால் தடை தகர்க்கப்படும். தவிடுபொடியாக்கப் படும் என நம் கலைஞர் அறிவிப்புக்குக் களங்கம் கற்பிக்கப் 'புரட்சியார்' கூறுவதைப் பாருங்கள். தடையை மீறினால் அப்பாவித் தொண்டர்கள் துப்பாக்கிக் குண்டிட வேண்டாம். தடையை மீறினால் எம். ஜி. ஆர். கரம் உடனே துப்பாக்கியைத் தொடுமென்று மறைமுகமாகவே உரைத்துவிட்டார். சுடுவது என்ன சுற்றுலா செய்வது போன்ற சொகுசான செய்கையா?

குடியரசு நாளின்போது கறுப்புக்கொடி காட்டவேண்டும் என்ற தீர்மானம் எழுந்த நாள் டிசம்பர் 24. குடியரசு நாளோசனவரி 26. இடையிலிருந்தஒருதிங்கள் காலத்தில் நம் முதல்வருக்கு ஒன்றும்தோன்றவில்லை போலும். போராட்டம் அறிவிக்கப்பட்டு, முயற்சிகள் முடியுந் தருவாயில், குடியரசு நாளுக்கு இரு நாட்கள் முன்பு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டுகின்றார். கறுப்புக்கொடி போராட்டத்தைக் கைவிடுக என்று அப்போதுகனிவதுஎவ்வகையில் நியாயம்?

உரிமை மலர்ந்த நாள். ஒப்புக்கொள்கிறோம். உற்சாகம் மிக்க நாள். மறுக்கவில்லை. ஏமாற்றுக்கு இரையான தென்னட்டவர்களைத் திருப்திப்படுத்த எல்லாப் பிரதமரும் வாக்குறுதிகளை வாரி வாரி வழங்கத்தான் செய்தார்கள். உரிமை கிடைத்ததா நமக்கு? நாக்குறுதியற்றவர்களின் வாக்குறுதி நம்பக் கூடியதா? எனவே தான் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இந்தி வெனும் மந்திக் கெதிராக முழக்கம் செய்தார். உறுதி கொண்டோரையும் இன உணர்வை ஏற்றிருக்கும் குருதி பெற்றோரையும் களத்துக்கு அழைத்தார்—கறுப்புக் கொடி ஏந்த—கன்னித் தமிழ் காக்க!

முதல்வரோ மத்திய அரசுக்கு நானொரு அடிமை எனக் காட்டிட தடைச் சட்டம் பொழுது விடிவதும் இருள் கழிவதும் புதிதல்லவே.

காட்சிப் பொருள் ஆட்சிப் பொருளானால் வெட்கக் கேடு! தி. மு.கழகத்திற்கு மட்டும் தமிழ் சொந்தமல்ல. நாங்களும் தமிழைக் காப்போம். தமிழ் எங்கள் மூச்சு பேச்சு எனும் காவல்காரர், பெங்களூரில் நடைபெற்ற கருப்புக் கொடி ஊர்வலத்திற்குத் தலைமை யேற்க இணங்கிய முத்தமிழ்க் காவலரை விட தமிழார்வம் கொண்டவரா? எம். ஜி. ஆரின் தமிழுணர்வை விட அவரது தமிழுணர்வு தாழ்ந்ததா? எம். ஜி. ஆரின் தமிழ்த் தொண்டு அவராற்றியதைவிட விஞ்சியதா? ஏன் இந்த மாருட்டம? முரண்பாடு? முரட்டு வாதம்? முள்ளான பேச்சு?

குடியரசு நாளில் வன்முறை எங்காவது நடந்ததுண்டா? அரசின் சொத்துக்குக் கேடு விளைந்ததுண்டா? குடியரசு நாளின் பெருமைக்கு மாசு சேர்ந்ததுண்டா? எங்கும், வறுமையால் வாடும் தமிழறிஞர்கட்கு வெறும் பட்டயமும் கொடுத்தவர்தானே எம் ஜி. ஆர்? கலைஞர் தலைமையிலான தி. மு. கவும் நடிக முதல்வரின் அ. தி, மு. க. வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக எப்படியிருக்க முடியும்?

கருங்கல்லைக் கண்கவர்சிலையாக மாற்றிய சிற்பியைப் போல், சாக்கடையாய்க் கிடந்த தமிழகத்தைப் பூக்கடையாய்ப் பொலிவடையச் செய்த இன உணர்வின் மைந்தன் எங்கள் அண்ணனின் வழியில் மொழி காக்க நாங்கள் செல்கின்றோம். எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்ற நாங்கள் இலவம்பஞ்சின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்துவதாயில்லை. மலைகளுக்கு அஞ்சும் மனப் போக்கு எங்களிடமில்லை. மண்மேட்டிற்கா

எம். ஜி. ஆரின் மாருட்டமும்!

டுக்கோ அல்லது வேறு தாக்குதலுக்கோ ஆளாகி மடிவார்கள். அவர்களது பிணத்தை வைத்து அரசியல் நடத்தலாம் எனக் கலைஞர் நினைத்தாராம். நாக்கு நீள்கிறது நடிக முதல்வருக்கு!

நீண்டு வளர்ந்த அழகிய கொம்பே மானின் அழிவிற்குக் காரணம் என்பதை மறந்து அந்நாளில் எம் உரிமையை நிலைநாட்டப் போராடுவது தவறு? இல்லையே. குடியரசு நாளைத் தி. மு. கழகம் கறுப்புக் கொடியேற்றிக் கொண்டாடுவது புதிதல்லவே.

இன்றைய ஆட்சியாளர்கள் தாய்க் கழகத்தில் இருந்த காலத்தில், 1965 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணாவின் ஆணைக்கிணங்க வெள்ளக் கோவில் பொதுக்கூட்டத்தில் கலைஞர் கறுப்புக்கொடி போராட்டம் அறிவித்தது தெரியுமா? அன்றைய முதல்வர் 'பண்பின் பாசறை' பக்தவத்சலனார் குடியரசு நாளின் முன்னர் சட்டமன்றத்தில் பேசும்போது "தி. மு. கழகம் குடியரசு நாளைத்துக்கநாளாக அமைதியாகக் கொண்டாடினாலும் அரசு பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது. திருமண வீட்டில் யாராவது அழுது கொண்டிருந்தால் வெளியே தள்ளப்படுவார்கள் என்றுமட்டும் உரைக்கவில்லை. கழகத்தினர் தங்களின் வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றிட அனுமதிக்க இயலாது. கலகம் மூண்டால் பாதுகாப்புக்கிடையாது" என்றும் கூறினார். குடியரசு நாளின் முதல்நாளே எங்கள் கலைஞர், உங்கள் நாவலர், நம் அண்ணா ஆகியோர் கைதானதையும் நாடறியும். ஏனெனில் அது நடந்த கதை.

பக்தவத்சலத்துக்கும் நானொரு தமிழ்மகன் என்று கூறிக்கொள்ளும் எம். ஜி. ஆருக்கும் என்ன வேறுபாடு?

முன்னாள் பிரதமரின் உறுதி மொழி மீது நாம் வைத்த அதே நம்பிக்கையை இந்நாள் பிரதமரின் உறுதி மொழி மீது வைக்க வேண்டும் என்று 'இதயக்கனி' கூறுகிறார். மும், தமிழுக்கு நான் ஆதரவாளன் என்று காட்டிக் கொள்ள கழகத்தின் ஊர்வலத்திற்கு அனுமதியும் வழங்கி திறமையாக நடந்து கொண்டார். மிகத் திறமையாக நடந்து கொண்டார். புரட்சியாரின் இரட்டை வேடம் புரிந்து விட்டது.

வசதியான வைஜயந்தி மாலாவுக்கு மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் சிறப்பூதியம் கும் இல்லை. காஞ்சித் தலைவனின் வழிவந்த தமிழர்களுக்கு கடுஞ் செயலும், காழ்ப்புணர்ச்சியும் தெரியவே தெரியாது. அஞ்சுவோம்? குருதியாக முட்களில் பட்டுப் பட்டு எங்கள் பாதம் முரடாகி விட்டது. அன்புடன் கூறுகிறோம்—எங்கள் வழியில் எதிர்ப்படும் மண்மேடாக இன்றைய முதல்வரும், அவர்து இயக்கமும் இருக்க வேண்டாம்.

★★★0★★★★

உறுதிக்குப்!
உழைப்பிற்குப்!!

எங்கள் பிரதிநிதிகள்:

கே. எம். ஜி. மாதவன்,
சென்னை-4

பி. நெடுஞ்செழியன்
பி. ஏ.
பாண்டிச்சேரி.

— விசுவாசம்

★★★★0★★★

அர்த்தமற்ற நம்பிக்கை!

தமிழகத்திலும், புதுவையிலுமுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எழுத்தர் தட்டச்சர் ஸ்டெனோ ஆகிய வேலைகளுக்காகப் பத்திரிகைகளில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தில், மேற்படி வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் இந்தியில் தட்டச்சு, சுருக்கெழுத்து திறமை பெற்றிருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும், புதுவையிலுமுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் பல்வேறு பிரிவுகளுக்கு ஆள் எடுப்பதில், அவர்களுக்கு இந்தி தட்டச்சிலும் சுருக்கெழுத்திலும் போதிய அறிவு இருக்கிறதா என்று சோதனை நடத்த என்ன அவசியம் வந்தது?

பிரதமரின் உறுதி மொழிக்கு மாருக இந்தி உறுதியாகத் திணிக்கப்படுகிறது. ஆங்கிலம் திட்டமிடப்பட்டு படிப்படியாக அகற்றப்படுகிறது என்பதை முதலமைச்சருக்கு தெளிவுபடுத்த இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்து என்ற புனிதத்தன்மையை அரசியல் சட்டம் வழங்குகிற வரை ஒவ்வொரு முனையிலும் மத்திய அரசின் ஆணையோடு இந்தி திணிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

எனவே பிரதமரின் உறுதி மொழியை முதலமைச்சர் நம்பிக்கொண்டு தொடர்ந்து உற்சாகத்துடனிருப்பது அர்த்தமற்றது.

('இந்து' ஆங்கில நாளிதழில்
திரு பத்மநாபன் என்பவர்
எழுதிய மடலிலிருந்து)

ஆதிக்கத்தை தகர்க்கச் சூளுரைப் போம்!

பாட்னா நகர் வீதியில் பெரும் ஊர்வலம்-மாணவரும் மக்கள் திரளும் அணிவகுத்து ஆதரவுக் குரல் தந்து துணை நிற்கிறார்கள். கோரிக்கை மனுக்கள் அடங்கிய வண்டியில் 'வீர உலா' வருகிறார் ஜெயப் பிரகாசர். துவக்கத்திலே—அது முற்றிலும் ஒரு மாநிலத்து உள் விவகாரமாகத் தோன்றி மறைந்து விடும் என்றுதான் பலரும் நினைத்தனர்.

ஆனால் —

ஒரு பெரும் அரசியல் மாறுதலுக்கான துவக்கம் என்பது பின்னாளில் தெரிய வந்தது. அப்படிப்பட்ட கால கட்டம் வரும்போது தான் நாடே 'ஜே பி.' என்ன சொல்கிறார் எனக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தது.

'முழுப் புரட்சி'யின் நாயகன் பலதரப்பட்ட துறைகள் பற்றி—ஆட்சி பீடத்தினிடம் தாம் காணும் குறை பற்றி—தமது கருத்துக்களை வெளியிட்டார்.

முழுப் புரட்சி பற்றிய கருத்துரைகளைத் தமிழிலே கூட 'தினமணி' வெளியிட்டது.

பல்வேறு மாறுதல்கள் பற்றியும் பாரதத்து மக்கள் முன் தம் கருத்துக்களை வைத்த ஜெயப்பிரகாசர். தமது முழுச் செய்தியிலும் கை வைக்காத பகுதி மொழிப் பிரச்சினை. அவர் கால்வைக்கப்பயப்பட்ட இடம் மொழிப் பிரச்சினை.

மாநில சுயாட்சிப் பிரச்சினையில் கூட அவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் ஏன் மொழிப் பிரச்சினையில் கலக்கவில்லை? அவர் ஏன் அதை மட்டும் விட்டு வைத்தார்? அதில் அர்த்தம் இல்லாமல் இல்லை......

அவர் முதல் விடுதலைப் போரில் முன்னணியில் நின்றவர். அவர் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக எப்படியெல்லாம் மக்கள் 'குரல் உயரும்—திரள் கட்டும்' என்பதை உணர்ந்தவர்,

அவர் சரித்திரங்கள் எப்படியெல்லாம் மாறும்—எதனால் மாறுதலுக்குத் தள்ளபபடும் என்பதை அறிந்தவர்.

அவர் ஆர்ப்பாட்ட அரசியலை விட்டு நெடுங்காலம் ஒதுங்கிச் சிந்தனையாளராகவே இருந்து விட்டு ஏற்ற காலமும் ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெற்ற மனிதர்களும் வாய்த்ததும் காலத்திற்கு வந்தவர்.

அப்படிப்பட்டவர் — மொழிப் பிரச்சினையைத் தொடாத காரணம் என்ன?

சிந்திக்கவில்லை ஆட்சியாளர்கள்.

இந்தியைப் புகுத்துவதிலே இத்தனை வேகம் காட்டுவோர் அதற்கெனக் கொஞ்சம் நேரம் ஒதுக்கிச் சிந்தித்திருந்தால்... அது நாகரீகமாக இருந்திருக்கும். நல்லாட்சி என்று பெயர் வாங்கித் தந்திருக்கும்.

அவர் மட்டும் மொழிப் பிரச்சினையில் தம் கருத்தை முன் வைத்திருந்தால்—...

அது இந்திக்குச் சாதகமாக இருந்திருந்தால்...

அது இந்தியல்லாத மற்ற மொழியை அடக்கி ஒடுக்குவதாக இருந்திருந்தால்......

சரித்திரம் மாறியிருக்கும்! பாட்டனா நகர வீதியில் வலம் வந்தது; வரலாற்று ஏடுகளில் பதிந்திருக்காது. இதுதான் உண்மை.

அத்தனை தலைவர்களும் உள்ளே இருக்கும் போது அவசர நிலைக்கு எதிராக நம் தலைவர் கலைஞர் தலைமையில் கூடித் தலைவர் பெருமக்களை விடுதலை செய் என்ற குரல் வந்ததே... அப்போது ஒவ்வொரு தமிழனும் என்ன நினைத்தான்?

விடுதலை ஒரு கருவி நல்லதை அடைவதற்கான வழித்தடம் என்ற கருத்திலே தானே குரல் கொடுத்தான்.

மொழி ஆதிக்கம் கூடாது என்ற அவனது குரல் ஏன் வெறுக்கப்படுகின்றது?

அம்மையார் கூட இத்தனை வேகம் காட்டவில்லையே. அப்படி என்ன அவசரம்? இப்போதுதான் முடியும், இனி வாய்ப்பு இருக்காது என்ற பதை பதைப்பா? அவசர நிலைக் கால அம்மையாரை நல்லவராக்க வேண்டாம்.

உள்ளே இருந்தபோது குரல் கொடுத்த தமிழன் முகத்தில், வெளியே வந்ததும் கரிப்பூச்சா?

எதையும் தாங்கிக் கொள்வான் தமிழன்.—'ஏமாளி' என்ற நினைப்பா!

கோவைத் தம்பி

இத்தனைக்கும் ஒரு விடை காணத்தான் 'மாநில சுயாட்சிக் குரல் பிறந்தது. அம்மையாரிடம் அடி உதை பட்ட காலத்தில் அவர்களுக்கு அது இனித்தது. இங்கே அது வேம்பு 'தீண்டேன் திருநீலக் கண்டம்' என்று ஒதுங்குகிறார்கள்.

நேற்று அவர்கள் இன்று அர்ஸ்; இதுதானே நடப்பு!

ஆனால். கழகம் கழகமாகவே இருக்கின்றது.

கலைஞர் கலைஞராகவே இருக்கிறார்.

அதுதான் தமிழினத் தலைமையின் தனித் தன்மை!

இந்த உறுதி இருக்கின்ற வரை எந்த வல்லமை மிக்க சக்திகளையும் புறம் காண முடியும் கழகத்தால். எந்தத் துரைத்தனமும் செல்லுபடியாகாது. எப்படிப்பட்ட வாத வலைகளையும் கிழிக்கக் கூடிய சக்தி இருக்கிறது கழகத்திடம் வலிமை உண்டு கலைஞருக்கு

அவர் கோட்டைக்கு உள்ளே இருந்துவந்திருப்பவர். புதிதாகக் கோட்டைக்குள் நுழைந்தவர்கள் அப்படி ஒன்றும் சாதாரணமாக விளையாடி விட முடியாது.

ஒரு காலத்திலே மாநில சுயாட்சிக் குரலைத் தன்னந் தனியராகத்தான் சொன்னார். அனைத்திந்திய அரசியல் அரங்கே பரபரப்போடு விவாதித்து வருகின்றது. வேளை வரும்போதெல்லாம் வேண்டியவர்கள் அந்த ஆயுதத்தை எடுத்துக் கொள்ளத் தவறுவது இல்லை.

பின்னாளில் மக்களாட்சி முறை அருகி விடலாம் வன்ற பயம் வந்த போது—விளைவுகளுக்கு அஞ்சாமல் குரல் தந்தார். 'மனசாட்சி மாதா' வீதிக்கு வரவேண்டி வந்தது.

இதோ! இந்த இருபத்தாறில் அவர் கருஞ்சட்டைப் பேரணியை நடத்திக் குரல் தந்திருக்கிறார்.

அவரது குரல் —அது நியாயத்தின் வடிவம். அவரது வேண்டுதல்! அனைத்து மொழிகளுக்கும் சம உரிமை அதுவரை...திணிப்பிலிருந்து பாதுகாப்பு.

இது ஆட்சியாளர்களுக்குச் சாதாரணமாக இருக்கலாம்.

இந்திராவுக்குக் கூட பாட்னா ஊர்வலம் சர்வ சாதாரணமாகத்தான் தென்பட்டது.

காலங்காலமாக எதிரும் புதிருமாக இருந்த சீனவும் அமெரிக்க நாடும் கைகோத்து நிற்கின்றன, இன்றும் வியட்னும் மண்ணில் இரத்தம் காயவில்லை.

எதிரிகளே கூடும் போது-இந்த நாட்டின் ஒவ்வொரு குடி மகனும் சகோதர பனப்பான்மையோடு - சம உரிமையோடு, உறுத்தல் இல்லாமல், உள்ளபோடு பழக விட வேண்டியது மைய அரசின் கடமை.

எது எப்படி இருந்தாலும் அண்ணன் நினைவு நாளில் ஒரு உறுதி மொழி ஏற்போம்...... ஆதிக்கம் தகர்ப்போம்!

இந்தி பேசுவோர் எத்தனை பேர்?

இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாகவேண்டும் என்பதற்கு, இந்தி வெறியர்கள் கூறும் ஒரே காரணம்- அது பெரும்பான்மையான இந்திய மக்களால் பேசப்படுகிறது என்பதாகும்.

மற்றபடி —

இந்தி காலத்தால் மூத்த மொழி என்றோ, இலக்கண, இலக்கியங்களால் வளம் பெற்ற மொழி என்றோ ஆட்சி மொழி ஆவதற்கான அனைத்துத் தகுதிகளும் பெற்றமொழி என்றோ, இந்திக்கு வக்காலத்து வாங்குபவர்களால் கூட வாதிட முடியாது.

தமிழ், தெலுங்கு. மலையாளம் கன்னடம்—போன்ற தென்னாட்டு மொழிகளோடு எந்தவிதத்திலும் ஒப்பிட்டுப் பேச முடியாத அளவுக்கு. இந்தியானது தனிச் சொற்களும் பெயர்ச் சொற்களும் போதுமான அளவுக்குப் பெற்றிராத மிகக் குறுகிய வட்டத்திற்குள் சுழலும் வளமற்ற மொழியாகும்.

பெரும்பான்மையான இந்தியர்களால் பேசப்படும் மொழி இந்தி என்பது கூட ஒப்புக்கொள்ள முடியாத — உண்மைக்கு மாறான வாதமாகும்.

இந்தி எத்தனை இந்தியர்களால் பேசப்படுகிறது என்ற சரியான கணக்கீடு இந்திய அரசுக்குத் தெரியுமா என்பதே சந்தேகத்திற்குரிய ஒன்றாகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பை ஆதாரமாகக் கொண்டு, தமிழ் — மலையாளம் — கன்னடம் — தெலுங்கு இன்ன பிற மொழிகள் பேசுவோர் எத்தனைபேர் என உறுதியாகக் கூற முடியும்.

ஆனால் —

இந்தி பேசுபவர்கள் எத்தனை பேர் என்ற உண்மை யாருக்கும் தெரியாது! இதுவரை அம்மொழி பேசுவோர் எத்தனைபேர் என்ற சரியான கணக்கீடும் வெளியிடப்பட்டதில்லை.

இந்தியாவில் இந்தி பேசுபவர்கள் நூற்றுக்கு நாற்பத்திரண்டு பேர்கள் என்ற கணக்கை குத்துமதிப்பீடாக அரசு ஒரு முறை வெளியிட்டது. நாற்பத்திரண்டு பேர்கள் பேசும் மொழியை ஐம்பத்தெட்டு பேர்கள் மீது திணிக்கலாமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும்—

முதலில் இந்தக் கணக்கீடே சரியானதுதானா என்பதை ஆராயவேண்டும்.

1951-ஆம் ஆண்டில் இந்திய அரசு மக்கள் தொகைக் கணக்கீட்டை (சென்சஸ்) எடுத்தபோது—

இந்தி பேசுபவர்கள்தான் பெரும்பான்மையினர் என்ற வாதத்தை நிலைநாட்டுவதற்காக, இந்தி வெறியர்கள் இந்தி பேசாதவர்களையும். 'இந்தி பேசுபவர்கள்' எனக் கூறும்படி கட்டாயப்படுத்தினார்கள்.இதற்காகஇடைவிடாத பிரச்சாரமும் நடத்தினார்கள். இதை எதிர்த்து வட மாநிலங்கள் பலவற்றில் வாழ்ந்த மக்கள் குரல் எழுப்பினார்கள். பெரிய குழப்பத்திற்குப் பிறகு தவறான கணக்கு வெளியிடப்பட்டது—இந்தி பேசுபவர்கள்தான் அதிகம் என்று!

இந்தி பேசுபவர்கள் 100 க்கு 42 பேர் என்ற கணக்குக் கூட உருது, பஞ்சாபி, இந்துஸ்தானி போன்ற மொழிகளைப் பேசுவோரையும் இந்திமொழிக்காரர்களாக உருவகப்படுத்தியதால் ஏற்பட்டதாகும், இந்த மொழிகளுக்கும் இந்திக்கும் தொடர்பே இல்லை என்றபோதும் இவர்களையும் இந்தி மொழிக்காரர்களின் பட்டியலில் சேர்க்கும் 'வித்தையை, அரசு திறம்படச் செய்கிறது, செய்து வருகிறது.

மீண்டுமொரு மொழிப் புரட்சி!

(கவிஞர் மணிமொழி)

மீண்டும்மொரு மொழிப் புரட்சி
தோன்ற வேண்டுமா? — அன்று
மாண்டவரின் வரலாற்றுச்
சான்று வேண்டுமா?
மூண்டபெரும் கனல்மீண்டும்
மூளவேண்டுமா? குழி
தோண்டியதில் இந்தியினை
மூடவேண்டுமா?...
(மீண்டுமொரு...)

மீண்டுமிங்கு முரசொலிகள்
கேட்க வேண்டுமா? எம்
ஆண்டதமிழ் வீரமதைப்
பார்க்க வேண்டுமா?
தூண்டுகிறீர் வேங்கையினைத்
தீர்க்கவேண்டுமா? — கோட்டைத்
தாண்டுகிறீர் கல்லறைகள்
சேர்க்க சேர்க்கவேண்டுமா?...
(மீண்டுமொரு)

துள்ளுதமிழ் வீரரெல்லாம்
துடிக்கவேண்டுமா? — இந்திக்
கள்ளமொழி ஆதிக்கத்தை
நறுக்க வேண்டுமா?
வெள்ளமெனப் பொங்கிவந்து
அடக்க வேண்டுமா? — சிறு
பிள்ளைகளே உம்கதையை
முடிக்க வேண்டுமா?
(மீண்டுமொரு...).

தெய்வ பக்திக்கு வடமொழி-

தேச பக்திக்கு இந்தியா?

மருத்துவ இடலைக் சற்க ஆங்கிலம் தேவையில்லை என்கிறார் மொரார்ஜி தேசாய்.

தொடர்ந்து கேட்டால் விஞ்ஞான மருத்துவமே வேண்டாம் என்கிறார்.

1979 ல் இவரைப் பிரதமராகக் கொண்டுள்ள பாரதமே உன்னை பக்தியோடு தரிசிக்க நாங்கள் இந்தி கற்றுத்தான் தீரவேண்டும்!

இல்லையெனில் நாங்கள் தேசத் துரோகிகளாம்!

சொல்லியிருப்பவர் பிரதமர் இவர் இந்தியைத் திணிக்க மாட்டாராம்! நம்பச் சொல்கிறார் இங்கு ஆளும் பொறுப்பிலுள்ள முதல்வர்

ஆணவத்திற்கு அகங்காரம் துணை

அஞ்ஞானத்திற்கு அரைஞானம் சாட்சி.

தேசபக்தி இருக்குமானால் இந்தியைப் படியுங்கள் என்று கூறுகிறார் மொரார்ஜி.

எனவே இந்தியாவில் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத பெரும்பான்மை மக்கள் தேசபக்தி இல்லாத இடங்களில் பிறக்கிறார்கள். தேசபக்தி இல்லாத மொழிகளில் பேசுகிறார்கள். இத்தகையோர் தேசபக்தர்கள் ஆக இந்தியைப் படிக்கவேண்டுமாம்.

வடமொழியைப் படித்தால்தான் தெய்வபக்தி செழிக்கும் என்று கூறி உயர் சாதி ஆணவக்காரர்கள் வடமொழியை திணிக்க முயன்றதால், மக்கள் சாகவில்லை.

தெய்வ பக்தியும் கூட சருகவில்லை. திணிக்க முயன்ற வடமொழிதான் செத்தது.

அன்று தெய்வ பக்திக்கு வடமொழி.

இன்று தேசபக்திக்கு இந்தி

பழைய அனுபவத்திலிருந்து கூட பாடம் கற்றுக் கொள்ள மறப்போர் இன்று நாம் கூறுவதையும் ஏற்கப் போவது இல்லை.

ஏனெனில் "இறுதிமுடிவை நான்தான் எடுப்பேன்' என்றல்லவா பிரகடனம் செய்கிறார்.

இந்தியாவிற்கு ஒரே ஒரு தேசிய மொழி என்பது சாத்தியமே இல்லை.

நான்கு மொழிகளை ஏககாலத்தில் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ள ஸ்வீடனிலும் பதினாறு மொழிகளை ஏற்றுக்கொண்டுள்ள, சோவியத் யூனியனிலும் நான்கு, பதினாறு வகைகளாக தேசபக்தி சிதறவில்லை.

ஒன்றாக ஒங்கியே நிற்கிறது கொடிபிடித்து உயிர் நீத்த குமரனுக்கு தேசத்தைப் பற்றித் தெரியும்.

தேசபக்தி உண்டு. இந்தி தான் தெரியாது.

நம் ஊரில் உள்ள வட்டிக் கடைச் சேட்டுக்கு இந்தி தெரியும்

தேசபக்தி மட்டும்தான் தெரியாது. வட்டி மட்டுமே தெரியும்.

குஜராத் பெற்றுத் தந்த உத்தம புத்திரன் தானே மொரார்ஜியும்! எனவே அதே கருத்தை வெளியிடுகிறார்

மொரார்ஜியின் பேச்சு இந்தியை — இந்தியாக மாற்றி வருகிறது. அது இந்தியாவைச் சுட்டு, வடு ஏற்படுத்தப்போகிறது.

ஒரு மொழியைக் கற்பதற்கும் தேசபக்திக்கும் சம்மந்தமில்லை. அதைப் பற்றி மொரார்ஜிக்கும் கவலை இல்லை

மொரார்ஜியின் பேச்சு தான் 'மொழிக்கு ஒரு நாடு'' என்ற கருத்துக்குத் தூபம் போடுகிறது:

இந்திமொழி பேசாத பகுதிகளில் வாழும் தேச பக்தர்கள் விழித்தெழுந்தாக வேண்டும் இப்பொழுது இந்தி வெறியர்களால்தான் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் அதிகாரத்தில் இருக்கிறார்கள், அவர்களே கொள்ளி வைக்கத் தொடங்கும் பாது அதைத் தடுக்க அனைவரும் திரண்டாக வேண்டும்.

இந்திய மக்கள் பேசும் அனைத்து மொழிகளுக்கும் சமத்துவ உரிமை சட்டப்படி வழங்கிட வேண்டும். இணைப்பிற்கும் அனைத்து மொழிகட்கும் உரிமை வேண்டும்.

இந்த மாற்றத்தைக் கொண்டு வரும்வரை, ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும் மணிப்பூரில் சட்ட மன்றம் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது

மிசோரமும் இதை ஒருமனதாக வலியுறுத்தியுள்ளது.

இது இன்று நாட்டு மக்களின் குரலாக வளர்ந்துள்ளது இந்த நியாயத்தை ஏற்காமல் இந்திக்கு தேசபக்திச்சாயம் பூசி, மாற்றுக் கருத்துக்கூறுவோரை தேசத் துரோகிகள் என்று குற்றஞ்சாட்டி, நாட்டைக் குட்டிச்சுவராக்க மொரார்ஜி முயற்சிக்கிறார்.

கட்சி வேறுபாடு கருதாமல் மொரார்ஜியின் இந்தச் சர்வாதிகாரக் கருத்துக்கு எதிராக குரல் எழுப்பப்பட வேண்டும்

மொரார்ஜியின் சார்பில் தமிழக முதல்வர் உறுதிமொழி கொடுப்பதைக் கைவிட்டு மக்களோடு சேர்ந்து நிற்க அவரும் வருவதுதான் அவருக்கும் நல்லது.

தா. பாண்டியன்
(ஜனசக்தி ஆசிரியர்)

அதை விடுத்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்குவேன் என எச்சரிப்பது வேடிக்கையானது. இதே எம். ஜி. ஆர். இந்தித்திணிக்கப்படுவதாகக் கூறியதும், தன் தலைமையில் போராட வருமாறு அழைத்ததும், தூதுவர் அலுவலகத்தில் இந்தி திணிப்பைப் பார்த்ததாகச் சொன்னது நினைவுபடுத்தப்படுகிறது எனவே தன்னை மறந்து அவரும் மிரட்டலில் ஈடுபடவேண்டாம். தேசபக்திக்கு மொரார்ஜியின் சான்றிதழை நாம் நாடத் தேவையில்லை.

(—நன்றி: ஜனசக்தி 28-1—79)

★ அ. இ. வானொலியில் இந்தி ஆதிக்கம்! ★

இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிப்பதற்காகத் தொடர்ந்து பல நடவடிக்கைகளை இந்தி வெறியர்கள் எடுத்து வருகிறார்கள். தேசிய விழாக்கள் குறித்து இந்தியில் விவரிப்பது இந்தியிலேயே ஏடுகள் வெளியிடுவது. ஐ. நா. மன்றத்தில் இந்தியில் உரையாற்றுவது. 'கிரிக்கட்' விளையாட்டின் நேர்முக வர்ணனையை இந்தியில் ஒலிபரப்புவது - போன்ற செயல்கள் இவைகளின் விளைவே ஆகும் அண்மையில் அனைத்திந்திய வானொலி நிலையம் தேசிய நிகழ்ச்சிகளை இந்தியில் ஒலிபரப்பி வருவதானது இந்தித் திணிப்பின் இன்னொரு பகுதியே ஆகும்.

ஆரம்பத்தில் இந்த ஒலிபரப்பு ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தது! ஆனால். எங்கெல்லாம் இந்தியைத் திணிக்க முடியுமோ அங்கெல்லாம் நேரம் பார்த்து தாங்கள் நேசிக்கும் மொழியான இந்தியைப் புகுத்தும் இந்தி வெறியர்கள் இந்தக் கலாச்சார நிகழ்ச்சிகளையும் இந்தியில் ஒலிபரப்புகிறார்கள்.

தேசிய நிகழ்ச்சிகளில் கர்நாடக இசையை விரும்பிக் கேட்கும் பலர் தென்னாட்டவர் என்பதும், அவர்களில் பெரும்பாலானோருக்கு ஆங்கிலம் தெரியும் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. இம்மாதிரியான நிகழ்ச்சிகளில் இந்தியைப் புகுத்துவது தேவையற்றதாகும். ஏனென்றால் இந்தி தெரிந்திருப்பவர்களுக்கு நிச்சயமாக ஆங்கிலமும் தெரியும். எனவே துவக்கத்திலிருந்து இருக்கும் ஆங்கிலமே போதுமானது.

போதிய கல்வி அறிவு இல்லாதவர்கள்கூட பழக்கத்தின் காரணமாக ஆங்கிலத்தை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். இந்தி வெறியர்கள் தங்கள் மொழிக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுத்து திணிக்கப் பார்க்கிறார்கள்—இந்தி பேசாதவர்களால் — குறிப்பாகத் தென்னாட்டவர்களால் அம்மொழியைப் புரிந்து கொள்ள இயலுமா என்பதுபற்றியோ. இதனால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தோ அவர்களுக்குக் கவலை இல்லை

இந்தி ஒலி பரப்புக்களைச் செவிமடுப்பதில் தென்னாட்டவர்களுக்குத் துளி ஆர்வம் கூட இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏற்கனவே ஆங்கிலம் இருக்கும் போது புதிதாக இந்தியில் செய்திகளை ஒலிபரப்பித் தேவையற்று காலத்தை வீணாக்குவதையும் தென்னாட்டவர் விரும்பவில்லை, அனைத்திந்தியவானொலி நிகழ்ச்சிநிரல்களை ஆங்கிலத்தோடு இந்தியில் சொல்வதால் நேரம் வீணாவதோடு நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரமும் குறைக்கப்பட வேண்டி இருக்கிறது, இந்தி முற்றிலும் தவிர்க்கப்பட்டால், அதற்காக ஒதுக்கப்படும் நேரத்தில் வேறு சில நிகழ்ச்சிகளை இணைத்துக் கொள்ளலாம். இந்தி வெறியர்களின் அத்துமீறலான இம்மாதிரி செயல்களினால் தென்னாட்டவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்தி வெறியர்களின் வெறுக்கத்தக்க இத்தப் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது

தென்னாட்டில் வாழும் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்காக, இந்தியும் அனைத்திந்திய வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்படுகிறதென்று இந்தி வெறியர்கள் வாதிடக்கூடும்,

அப்படியென்றால் —

ஆங்கிலமோ, இந்தியோ அறியாத மக்கள் அனைத்திந்திய வானொலி நிகழ்ச்சிகளைத் தங்கள் தாய்மொழியில் கேட்டறியும் ஏற்பாட்டைச் செய்ய அவர்கள் சித்தமாக இருக்கிறார்களா?

இந்தக் கேள்விக்கான பதில் நிச்சயமாக 'இல்லை' என்பதாகத்தான் இருக்கும். 'நடைமுறைக்கு ஒவ்வாதது' எனக் கூறி இந்தி வெறியர்கள் இதை நியாயப்படுத்தவும் கூடும்

ஆகவே —

"எங்களுடைய கலாச்சார நிகழ்ச்சிகளில் தேசிய மொழி என்ற சாக்குச் சொல்லி இந்தியைத் திணிக்க வேண்டாம்'' என்று தென்னாட்டவர்களும் தயை கூர்ந்து கேட்டுக் கொள்கிறார்கள் —

அனைத்திந்திய வானொலி நிலையத்தின் பொறுப்பாளர்கள் இதை நினைவில் கொண்டு. வரும் நாட்களிலேனும் இந்தியால் தென்னாட்டவருக்கு ஏற்படும் தொந்தரவுகளைத் தவிர்ப்பார்கள் என்று நம்புவோமாக!

தென்னாட்டவரின் கோரிக்கைகளுக்கு டெல்லியிலுள்ள இந்திவெறியர்கள் இணங்காது. தொடர்ந்து இந்தித் திணிப்பில் ஈடுபடுவார்களேயானால், அபாயகரமான இப்போக்கைத் தென்னாட்டவர்களால் பொறுத்துக் கொள்ள இயலாது.

[பம்பாய் பாண்டுப்பிலிருந்து திரு. கே. வி. சுவாமிநாதன் என்பார், இந்தி ஆதிக்கத்தின் விளைவு குறித்து நமக்கு எழுதியுள்ள ஆங்கிலக் கடிதத்தின் மொழிபெயர்ப்பே மேலே தரப்பட்டுள்ளது]

அண்ணா வழியில்...

தமிழே! தேனே! தங்கக் கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக் கலையே!
எழிலே! அறிவே! எண்ணச் சுடரே!
பொழிலே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட் குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரு சுகமே!
தாயே உன்றன் தாளிணைப் பற்றித்
தலைமைக் கவிதை பாடிட வந்தேன்.
அண்ணா வழியில் அயரா துழைக்கப்
பண்ணால் புழங்கிப் பயணம் தொடரக்
கண்போல் கழகம் காக்கும் சூளுரை
விண்போய் முட்டிட உரக்கக் கூவுக!
இன்றைக்கு நடந்ததுபோல் இருக்குதய்யோ கழகக்
கன்றை விட்டுப் பசுபிரிந்த அந்தக் காட்சி
குன்றைத் துளைக்குமொரு வேலெடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்தது போல்
என்றைக்கும் நமை விட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்து விட்டான் அய்யகோ!
ஆயிற்று ஏழெட்டுப் பத்தாண்டு
'கொன்றை வேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு – நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு.
பொங்கு கடல் நடையும் பூவையரின் மென் நடையும் – தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையாய் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்
புழுதிக் குணம் படைத்தோரை ஓட்டியவன்
பொன் மகுடம் தமிழ்த் தாய்க்குச் சூட்டியவன்
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன் – அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாவில் உழுதகோல் – நம்
நாளில் அழுதவரைச் சிரிக்கவைக்க
அவன் தந்த ஆட்சிக் கோல்!
குதிகால்கள் பரதம் ஆடப் பேச்சரங்கில்
கொய்யாத் தமிழ் எடுத்துக் கொடுத்திட்டார்;
சதிகாரர், சாய்க்கின்றார் தமிழ்மொழியை என்றபோது
அவர்.
மொழிப் போரின் மூலபலம்! களம் கண்டு
விழிப்போரைக் கண்டுகொண்டு – தன்னைப்
பழித்தோரைப் பாராட்டும் பண்பாளர்.
அழித்தாராம் ஆதிக்க மொழி வெறியை!
பலகார பட்சணம் - பாணிக் கிரகணம் –
வதூவர கிரகப் பிரவேசம் பந்துமித்திரர்
நமஸ்காரம் – உபய குசலோபரி
நாமாவளி – துவஜா ரோகணம் என
நாக்குக்கு நுழையாத வடமொழிப் படையெடுப்பால்
வாக்குக்குச் சுவைசேர்க்கும் வண்ணத் தமிழ் வாடுவதோ?
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர் வாய்சிவக்கும்.
தாக்குதற்குத் தமிழைப் பிறமொழி பெருகிவந்தால்
அவர்கண் சிவக்கும்
அக்ராசனாபதியை அவைத்தலைவராய் உலவவிட்டார்
அந்தநாள் பிரசங்கம், சொற்பொழிவாய் மாறிற்றின்று!
நமஸ்காரம் கிமஸ்காரம் எல்லாம்
நலமான தமிழிலே நல்வணக்கமாய் மலர்ந்ததுகாண்
தூய்மையாய்த் தமிழில் கொடியேற்றுவிழா வந்தபின்னர்
துவஜாரோகணத்துக்கு அங்கென்னவேலை?
வாய்மையே வெல்லுமென்றால்
'சத்யமேவ ஜெயதே' கோபித்தா கொள்ளும்?
அண்ணாவை ஒரு சீமான் என்பேன்
அவர் நண்பர்களையே செல்வமாய்ப் பெற்றிருந்தார்,
அண்ணாவை ஒரு துறவி என்பேன்.
அவர் வாயெல்லாம் காவி தரித்திருந்தார்!
அண்ணாவை ஒரு தெய்வம் என்பேன்!
அவருக்குத் துரோகிகளும் தூபதீபம் காட்டுகின்றார்!



அண்ணாவை ஒரு கண்ணன் என்பேன்!
அவரைப் பூதகியும் தூக்கிப் பால் கொடுக்கின்றாள்!
அரியாசனமாய் அவர் நம் இதயத்தை ஆக்கிக் கொண்டார்
அரியா சனங்கள் அவரை ஆரம்பத்தில்
புரியாமல் எதிர்த்ததுண்டு
சரியாசனச் சமதர்மம் போதிக்க வந்த
தென்னாட்டு மார்க்ஸ் என்று
பின்னால்தான் தெளிவடைந்தார்.
நரியும் பரியாய்ப் போன கதை
நாரதர் பெண்ணாய் ஆன கதை
உரியைக் கண்ணன் உடைத்த கதை
ஊரார் போற்றிய பழைய கதை
எரியில் துரும்பாய் ஆக்கியவர்
பெரியார் தந்த பேரறிஞர்!
இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கனென
இராவணனைக் கம்பன் இகழ்ந்தது – செல்லாதென
உருக்கமிகு ஓவியத்தை எழுத்தால் தீட்டிச்
சுருக்கென்று தைக்கின்ற கேள்விகளால்
தேவலோகப் பிறவிகளைத் தெருவுக்கு – இழுத்து வந்தார்
மேனிப் பசி முழுதும் தீர்ந்த பின்னர்
மேனகையைக் கைவிட்ட மாமுனியும்
தந்திரத்தால் அகலிகையைச் சுவை – பார்த்த
இந்திரனும் இணையற்ற பெருவேந்தும்,
கருணையின் வடிவங்கள் தாமோ?
கம்பரே! இராவணன்தான் கடுநெஞ்சக் – காவலனே

அண்ணன் எழுப்பிய
விளுக்கணைக்கு – இந்த
மண்ணில் எவர்தான்
விடையளிப்பார்?
அண்ணன் எழுதிய நூல் கொண்டு
சின்னக் கதையொன்று
நெய்கின்றேன் –
"ஓர் இரவு சந்திரோதயத்தில்
நல்லதம்பி வீட்டு வேலைக்காரி
ஓடுகிறாள் சந்திர மோகனிடம்
காதல் ஜோதியிலே
சொர்க்க வாசல் கண்டு
கம்பரசம் பருகுகிறார் மொண்டு!
கண்டிருந்த பெற்றோரும்
கடுங்கோபம் – கொண்டு
நியாயத்தை நிலை நாட்ட
நீதிமன்றம் சென்றார்.
வேலி போட்டுக் காதலைத்தான்
தடுத்திடவா வேண்டும்? இந்தத்
தாலி போட்ட அத்தானை நான்
மறந்திடவா வேண்டும்?
தாய் மகளுக்குக் கட்டுவதா தாலி?
எனக்கேட்டு வாதிட்டாள்
குமரிக்கோட்டம்!
என்றாலும் அவள் முன்னே
பணத்தின் தோட்டம்?
நீதிதேவன், மயக்கத்தைப்
போக்கி நின்று
நீவிர் வாழ்க நன்று என வாழ்த்திச்
சென்றான்!
உண்டென்பார் சிலர்! இல்லை என்பார்
சிலர்
எனக்கில்லை கடவுள் கவலை!
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
— இதை
ஒப்புவதே உண்மை ஆத்திகமாம்!
ஒருவனை ஒருவன் ஏமாற்றாதிருப்பதே
நாத்திகமாம்!
நன்றே சொல்வேன் நமக்குக் கடவுள்
நலிந்தோர் சிரிப்பில்தான்! இதனைக்
கொள்கையாய் நாட்டுக என்றார் —
அறிவுக்
கொடியை ஏற்றுக என்றார்.
கழகம்தான் மெய்யான
கம்யூனிஸ்டென்று
பழகு தமிழ் உவமையெல்லாம்
காட்டியது அண்ணனன்றோ?
வறுமையை ஒழித்திட அவர்
காட்டியதே நல்வழியன்றோ?
உரிமைகள் பெருகிட உண்மைகள்
நிலைத்திட அவர் உரைத்ததுதான்
நெறியன்றோ?
நாடு தழைத்திட நற்றமிழ் வளர்ந்திட
அவர் நாவசைவே முரசன்றோ?
நாளும் அவர் நமையாளும்
அரசன்றோ?
வாழ்த்து நாட்களிலே புதனைத்தான்
தேர்ந்தெடுப்பர் வைதீகர்
அண்ணா
வாழ்ந்திட்ட நாட்களிலே எதனை நான்
தேர்ந்தெடுத்து நினைத்துப்பார்க்க?
திராவிடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச்
சிந்திக்கப்
பேராசிரியர் வீட்டுக்குச் செல்வாரே!
அதனையா?
பிரிய மனமின்றிப் பிரிந்திருந்த
பதினெட்டு ஆண்டின் பின்னே
பெரியாரின் முகம் காணச்
சென்றாரே அவரோடு
அதனையா?
கணைகள் பல தாக்கினாலும் உன்னை
இந்தக்
கணையாழி காக்குமென்று
கடற்கரையில் அணிவித்தாரே!
அதனையா?
எதனை நினைத்தாலும் எங்களண்ணா
உனதுருவம் ஏற்றமிகு திருவுருவம்
அதனை நினைத்தே யாம் ஆறுதலைக்
கொள்கின்றோம்
தம்பியுடையான் படைக்கஞ்சான்
என முழங்கிவிட்டுத்
தனிமரம் தோப்பாகாது
எனச்சொல்வாய்! இங்கோர்
தனிமரம் தானேதான் தோப்பென்று
போன கதை நீ அறிவாய்
சனிப்பெயர்ச்சி சிலருக்கு
நல்லதென்பர் புராணீகர்!
இது மெய்யோ? பொய்யோ?
நம்கழகத்தில் சனிப்பெயர்ச்சி
நற்பலனை தந்ததண்ணா!
உன்வழியில் உழைக்கின்றோம்
அதனாலே
ஓநியமிலார் — முருங்கைக் கொம்பு
ஒடிபட்டுச் சிதறுதல் போல் – பகை
முறிபட்டுப் பஞ்சாய்ப் போகும்!
நீ தந்த விளக்கெடுத்து நடக்கின்றோம்.
நெய்யிட்டுத் திரியிட்டு உதவுகின்றார் தமிழ்மக்கள்
கடுமழையில் அணையாமல் காற்றுக்கு நடுங்காமல்
கரம் பொத்திக் கைவிளக்கைக் காக்கின்றோம்
வரம் ஒன்று தந்திடண்ணா! நான்
தவம் இருந்து கேட்கின்றேன்
அடித்தளத்து மக்களுக்கு அடுக்கடுக்காய்ச் சாதனைகள்
அண்ணா உன் வழியில் அயராமல் நடப்பதெல்லாம்
கண்ணால் ஒருமுறை நீ பார்த்துவிட்டால்
எம் கவலையெல்லாம் பறந்து போகும்!
தண்ணார் முழுநிலவே தட்டாமல் நீ வந்துவிடு
இந்த வரம் நீ தந்தால்
இறவா வரம் பெற்றதுபோல்
இன்பத் தமிழகமே கூத்தாடும் — எங்கள்
துன்பமெலாம் தொலைந்துவிடும்.

★



அண்ணன் இருக்கின்றார்!

சந்தனமே'
தென்பொதிகை தவழ்ந்துவரும் இளங்காற்றே!
நந்தாத சுடர்விளக்கே
நறுமணமதுப் புதுமலரே!
கண்ணியத்தை கடமையினை கட்டுப்பாடெனும்
பண்பைக் கண்போலக் காத்திடற்குக்
கற்பித்த பெருந்தகையே!
சிங்கத் தமிழர்களின் சிந்தையெலாம்
பறிகொண்டு
வங்கக் கடலோரம் வாய்மூடிக் கண்மூடி
மோனத் தவமிருக்கும் முத்தமிழே!
குடிசையெலாம் மேலுயர்ந்து
கோபுரமாய் விளங்கிடவும்
மடமையிருள், கொல்வறுமை
மடிந்தே கருகிடவும்
எல்லாரும் நலனெல்லாம்
எய்தி மகிழ்ந்திடவும்
நல்லதோராட்சியினைத்
தோற்றுவித்த நாயகமே!
எண்ணக் குறிப்பறிந்தே
ஈடேற்றும் தம்பியரின் அண்ணாவே!
எனையிங்கே ஆளாக்கிக்
காத்திட்ட ஆருயிரே!
நும்கனவு அத்தனையும் நனவாக்கும்
சீரிய நற் பணியினையே செய்கின்றோம்
நாள்தோறும்
செய்பணிகள் அனைத்திலுந்தான்
அண்ணனே! நீ இருக்கின்றாய்!
தாயே!
தாயின் குரலில்
"தம்பி!" எனவழைத்த தருவே!
தாய் அழைக்கும் போதெல்லாம்
நீயழைக்கக் காண்கின்றேன்'
தாயின் அழைப்பில் அண்ணனே
நீ இருக்கின்றாய்.
அன்றொரு நாள் ஆரூரில்
கண்பெற்ற மூதாட்டி
உன் தம்பியைக் 'கடவுள்' என்றாள்
அந்தக் 'கடவுளோ'
உன்னைக் கைதூக்கித்
தொழுதார் அங்கே!
ஆ; அண்ணா!
கத்தி முனைபட்டு அந்த ஏழையரின்
கண்ணெல்லாம் திறக்கும்போது
அந்தக் கண்ணிலே –
கண்பார்வையிலே —
உன் சிரித்தமுகம் தோன்றுது ஐயா!
காலையிலே மாலையிலே
கடும்பணி ஆற்றுகையில்
எப்பொழுதும் எந்நேரமும்
எப்பொருளிலும் அண்ணனே! நீ
இருக்கின்றாய்!
அம்மட்டோ...
எங்கள் பணி முடித்து
என்றாவது ஒருநாள்
உன் மடியில் தூங்க
வரும்போதும்...
அண்ணனே! நீ
அங்கேயும் இருக்கின்றாய்!
அலைமேயும் கடலோரம் துயில்கின்ற
எம் அண்ணனே!
அணையா விளக்கே! அன்பின் ஒளியே!
நீதந்த அணையா விளக்காம்
தி. மு. கழகமென்னும் தீபச்சுடர் ஏந்தி,
இருட்டு மனிதர்களின்
புரட்டுச் செயல் அனைத்தும்
விரட்டி அடித்திடுவோம்
வெற்றிக் கொடி பிடித்திடுவோம்!

கலைஞர்

தூளாகட்டும் துரோகம்!

ஆசைத்தியில் வீழ்ந்துவிட்ட விநாடியில் அதன் வனப்புமிக்க சுடர் ஒளியில் மனதைப் பறிகொடுத்தவர்களின் மனநிலையை வெறும் வார்த்தைகளில் அடக்கிவிடல் என்பது அவ்வளவு எளிதானதல்ல

அந்த உணர்வின் பிடியில் இருக்கும் கால இடைவெளியில்—ஏக்கப் பெருமூச்சுக்கள் குரல்வளை நெரிப்புக்கு உள்ளாகின்றன. ஏமாற்றம் அடிச்சுவடே தெரியாத அளவுக்கு தூசுத் துடைப்புக்கு ஆளாகின்றது.

இவை பின்புலமாகஇருக்க—எதிர்பார்ப்புக்கள் நடப்புக்களாக மனத்திரையில் நிழலாட்டமிடும். இன்பத்தின் எல்லை வரையில் இட்டுச் செல்லும் ஆற்றல் படைத்தவை அந்நிழலாட்டங்கள்

இக்காலங்களில் எவரது கால்களும் பூமிப்புழுதியில் பதிந்து மீளா. சராசரிகளினின்று மாறுபட்டவர்களாகத்தான் — வேறுபட்ட பிறவியாகத்தான் உள்மனம் உயர்த்திக் கூறும். நட்சத்திரக் குவியல் நடுவே தலை சுழன்று திளைக்க வைக்கும் தன்னைத் தவிர அடுத்தவரை எல்லாம் கறைபட்டவர்களாக — களங்கம் மிக்கவர்களாக கணக்கிடு செய்யு[ம்] உள்ளம்.

கனவுகளும் கற்பனைகளும் வளர்ந்து வளர்ந்து முடிவில் நினைவில் திளைப்பவனை இமயத்தின் உச்சியில் நிறுத்தி உயர்த்திக் காட்டும். நிலை எதுவாக இருப்பினும் நினைப்பு அதை மறக்கடிக்கும்

ஏற்றம் மிக்க எதிர்காலம் காத்துக்கிடப்பதாக அவனுள் அசரீரி இடைவிடாது ஒலி பரப்பாகும். நம்பிக்கை உதயமாகும் — தெம்பு பிறக்கும்.

இந்த மனநிலையோடு ஒருவன் நடப்பை மறந்துவிட்டு நடைபோட ஆரம்பித்தால்—அது அழிவுக்கு அச்சாரம் அல்லது முடிவின் தொடக்கத்திற்கான முதலடி...

இத்தகு சோதனையான நிலைக்கு அடிப்படையாக அமைவதே கருத்துவேறுபாடு.

ஒவ்வொரு தனி மனிதனும் எண்ணத்தால் செயலால் அடுத்தவனில் இருந்து மாறுபட்டு நிற்கும் சமுதாய அமைப்பில், கருத்து வேறுபாடு தவிர்க்க — தடுக்க இயலாததாகவும், எதிர்பாக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

ஆனால்—மனநிலை மாறுபாடு கொண்ட 'கணவன்—மனைவி' இருவரின், தன்னிச்சைப் போக்கு தத்தமது கருத்துக்கு அடுத்தவரைப் பணிய வைக்கும் திணிப்பு முயற்சி. உறுதி பெறும்போது ஒருகுடும்பத்தில் நிம்மதி மட்டுமல்ல—மணவாழ்வின் புனிதத்துவமும் சீர்குலையும் இதில்வீட்டுக்குள் பேசவேண்டியதை வீதிக்குக் கொண்டு வருவோர் அருவருக்கத் தக்கவரே!

இதைப்ய ஒரு கட்சிக்கு எனப் பொருத்திப் பார்த்தால் — கூடிப்பேச வேண்டியதை — கூட்டி வைத்துச் சொல்ல வேண்டிய கருத்தை வெளியில் வார்த்தையாடுவது காட்டிக் கொடுக்கும் துரோகச் செயல்!

கழகத்தைப் பொறுத்தவரை அது சனநாயக முறை கொண்ட பின்னல் முறையிலான அமைப்பு உள்ள தனித்தன்மை மிக்க இயக்கம்.

அதிகாரம்பெற்ற பொதுக்குழு—ஆணையிட்டுத் தலைமை ஏற்கப் பணித்தபின்—தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பதே கடமை. கட்டளைக்குக் காத்திருப்பதே கண்ணியம் மிக்க செயல் கட்டுப்பாடு தரம் பிரிக்கப்படுவதே இந்த அளவு கோலால்தான்.

கருத்துக்களைச் சொல்லலாம்—சொல்லவேண்டிய இடத்தில். அதை விடுத்து அழிய மாட்டார்களா இவர்கள் என ஆசையுடன் காத்திருப்பவர்கள் வாயிலில் நின்றுவார்த்தைகளை வீசுவது, அடுத்துக் கெடுப்பதற்கு இணையான செயலாகும்

'நான்' என்பதை மறந்துவிட்டு 'நாம்' எனச் சிந்திக்கும் மனப்பக்குவம் பெற்றுவிட்டால் — தனிப்பட்ட யாரையும் விட இயக்கம் பெரிது என்ற சிந்தனையை வளர்க்கக் கற்றுக் கொண்டு விட்டால். அதைவிட இலட்சியம் பெரிது என்ற உணர்வை இறுக்கிக் கொண்டால்...பிரச்சினையே இல்லை.

பாழும் மனம் இந்தஉணர்வுக்கு அப்பால் நிறுத்தியே சிலரை வேடிக்கைப் பொருளாக்கி—வேதனையை மெல்ல வைக்கின்றது.

எங்காவது கீறல் தோன்றுதா-பலவீனமான இடத்தில் பலமாகத் தட்டிப் பார்ப்போம் எனக் காத்துக் கிடப்பவர்களின் எட்டுத் தாழ்வாரம் வரை சென்று விட்டார் ஒருவர். அறிக்கைகளின் அணிவகுப்பு தொடர்கின்றது — அர்த்தமற்ற வாதம் அரங்கேறுகிறது.

இந்தக் கழகத்துக்கு நான் 'என்னென்ன செய்தேன் தெரியுமா! எப்படியெல்லாம் துணைநின்றேன் தெரியுமா!'-இப்படிச் சொல்வது தடம்புரண்டுபோகிற மனிதர்களின் மூல முழக்கம். இது புதிதாகச் சேரும் இடத்தில் பொறுப்பான பதவிக்கான மூலதனம். அவர்கள் எதுவுமே செய்யவில்லை என்பதல்ல வாதம் — அவர்கள் மட்டுமே என்பது மறுப்புக்குரியது.

இயக்கத்தின் கொள்கை வகுத்து நடப்பிக்கைகளைச் சுமந்தபடி — இரவுகள் விடியாதா என ஏங்கித் தவிக்கும் தமிழுணர்வு மிக்கவர்களுக்காகத் தளராது நடைபோடும்

★★★★★★ ★★★★★

அருணு சண்முகம்

★★★★★★★★★★★

தொண்டர்கள் - இவ்வியக்கத்தின் மைய இழை அறுபடாமல் இருக்கவேண்டும் என்பதில் எச்சரிக்கையாக இருக்கின்றார்கள்.

இத்தகு தொண்டர்களின் சலியா உழைப்பால் கிடைத்த பதவி போனபின் திண்ணை வேதாந்தம் பேசுவது கீழ்த்தரமான செயல் - குடிலத்தனம்.

நஞ்சு தாருங்கள் — நான் கழகத்தை விட்டு விலகேன் என்ற வார்த்தை வாரம் ஒன்றுக்குள் காற்றில் கலந்துவிட்டது. அது சிறகு கட்டிக் கொண்ட நேரத்துச் சிணுங்கல் அல்லது புறப்பாட்டு நேரத்துப் புலம்பல்-வேறொன்றுமில்லை.

இது, இயலாமையின் வெளிப்பாடு — ஏக்கத்தின் பிரபலிப்பு—எரிச்சலின் அச்சுப் பதிப்பு, அவ்வளவுதான்.

இவை எந்தத்தொண்டனையும் மூளைச்சலவை செய்துவிட முடியாது.

பழமரம் நாடிப்பறப்பவர்களை அவன் பார்த்துச் சலித்துவிட்டான்.

பதவிச்சுகம் தேடி அலைபவர்களை அவன் அருவருத்து ஒதுக்கிவெகு நாளாகிவிட்டது.

புதிதாக எதுவும் அவனை உலுக்கிவிட முடியாது. புதிதாக யார் புறப்பட்டும் அவனைக் குலுக்கிவிட முடியாது. இந்தத் துரோக வலை விரிப்பென்ன அவனுக்குப் புதிதா! காலங்காலமாக அவன் கண்டு வரும் வாடிக்கை நிகழ்ச்சிதானே!

அண்ணன் தந்த கொடி — அந்தத் தலைவனின் கொள்கை —தளபதி கலைஞரின் தலைமை இவைதான் இன்று கழகத் தொண்டனின் உணர்வு மையம்.

போகிற போக்கில் புழுதி வாரி இறைப்போரை அவன் அலட்சியப்படுத்திடத்தெரிந்து தொண்டான்

வந்து போகின்றவர்களுக்காக வழித்தடத்தில் நிற்காமல் பயணம் தொடர அவன் கற்றுக் கொண்டு விட்டான்.

அவசர நிலைக் காலக் கொடுமைக்கு அஞ்சாத நெஞ்சமா—இந்த அறிக்கை அணிவகுப்புக்கு அதிர்வு காட்டும்.

அடுக்கடுக்கான புனைவு வழக்குகட்கு அஞ்சாத உள்ளமா—இந்த அடுத்துக் கெடுப்போருக்குத் தளரும்.

இவை யெல்லாம் கழகத்தவரின் உணர்வை இறுக்கத்தான் முடியுமே அல்லாமல் தளர வைக்க இயலாது.

அவன் ஒரு முடிவுக்கு வந்து வெகு நாளாகி விட்டது— 'வாழ்வோ! தாழ்வோ! வருவேன் உன்னுடன்!' என இருவண்ணக் கொடியோடு கலைஞரின் பின் அணி வகுத்த பின் —

உணர்வின் அதிர்வுகள், மொழி இனம் இவற்றின் நலனை நாடி, படபடக்க ஆரம்பித்து விட்டன. அவன் தமிழ் தமிழன்—தமிழகம் தவிர வேறு அறியாதவனுகி விட்டான்.

அதனுல்தான் — இந்தச் சோதனை மிக்க கட்டத்திலும் தலைவன் தரும் செய்திகளைச் சாலை ஓரங்களில் சந்து[மு]னைகளில் எழுச்சிப் பண்ணுக இசைந்துத் தமிழகத்தைத் தட்டி எழுப்பிட முயல்கிறுன்.

[எ]ழுச்சி விதைகள் விளையும் நேரத்தில் இந்தத்துரோகிகளை நாடு அடையாளம் கண்டு. நகைக்கும்!

அந்தக் காலம் வெகு அண்மையில் தான் அது வரை, அவசரப்பட்டுச் சிறகு கட்டிக் கொண்டவர்கள் வாய் மூடிக் கிடப்பதே விவேகம்.

ஆனல் ஒன்று—தனது சலியா உழைப்பால் சரித்திர ஏடுகளில் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் அளவுக்கு உயர்ந்து விட்ட - உயர்ந்து நிற்கும் கலைஞரை வெற்றி கொள்ள முடியும் [எ]ன்ற கனவை துரோகிகள் கலைத்துக் கொள்வதே மரியாதைக்குரிய செயல்.

அவர்—காலத்தின் தலைவன்!

காலத்தை வென்ற தலைவன்!!

அவரை நோக்கி வரும் அம்புகளை அடுக்கி வைப்போம், அடுத்த தலைமுறைகாரி உமிழட்டும் துரோகத்தை வெல்வோம்!

தொண்டினைத் தொடர்வோம்'!

★

இறங்கு முகத்தில் இந்தியப் பொருளாதாரம்!

கடந்த முப்பது ஆண்டுகளில், இந்தியாவில் பொதுத் துறை, தனியார் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை 122,000 கோடி! வளர்ச்சித் திட்டங்கள் அல்லாத நிர்வாகச் செலவு, காவல் துறை பராமரிப்பு. இராணுவம் போன்றவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை 100,000 கோடி! என்றுலும் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நாடுஎந்த நிலையில் இருந்ததோ, அதே நிலைதான் இன்றும் நீடிக்கிறது.

இந்த முப்பது ஆண்டுகளில் ஏற்கனவே 200,000 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டும் தற்போது மத்திய, மாநில அரசுகள் ஆண்டு ஒன்றுக்கு 25,000 கோடி ரூபாய் செலவிட்டும் கிடைத்த பலன் என்ன? எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவைகளை இந்தத் தொகையைக் கொண்டு நிறைவேற்றியிருக்க முடியும், ஆனல் பாதி மக்கள் முழு பட்டினி: பாதிக்கு மேற்பட்ட மக்கள் அரை பட்டினி; ஒரு குறிப்பிட்ட சிறுபான்மைப் பிரிவினர்தான் அனைத்து சுகபோக வசதிகளுடன் வாழ்ந்து வருகிருர்கள்.

பணத்தின் மதிப்பும் கடுமையாக வீழ்ந்து விட்டது! 1947-ஆம் ஆண்டு பணத்தின் மதிப்புக்கு நல்ல வாங்கும் சக்தி இருந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னைய நாணயத்தோடு ஒப்பிடும்போது, இப்போது ஒரு ரூபாயின் மதிபபு இருபத்து நான்கு காசுகள்தான்: சேமிப்புகள், இன்சூரன்சாக இருந்தாலும், வைப்பு நிதியாக இருந்தாலும், அதன் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து. அவைகள் பயன்படாத நிலைக்கு வந்து விட்டன.

கடன் இருபது மடங்கு அதிகரித்து விட்டது. 1948-ஆம் ஆண்டில் இருந்த கடன் தொகை 45,00 கோடி. இப்போது இது 45,000 கோடியையும் தாண்டி விட்டது!

வறுமையில் உழன்று கொண்டிருக்கும் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனின் தலையிலும் ரூ. 750 ரூபாய் கடன் சுமை! பெரும்பாலான மக்களின் ஆண்டு வருமானம் கூட ரூ. 750 கிடையாது!

மத்திய அரசின் வரி விதிப்பு 659 கோடியிலிருந்து 13,600 கோடியாக உயர்ந்து விட்டது.

(-'பிளிட்ஸ்'' ஆங்கில வார இதழிலிருந்து)

தம்பிக்கு அண்ணா எழுதிய கடிதம்

இந்தி ஆதிக்கமும் நேருவின் உறுதிமொழியும்!

தம்பி!

ஞாயிறு—சிறை சந்தடியற்றுக் கிடக்கும் நாள். வெளியிலிருந்து யாரும் பார்க்கவரக் கூடாது. சிறை அதிகாரிகளின் நடமாட்டமும் மிகக் குறைவு. அன்று கைதிகள்; சீக்கிரமாகவும் பூட்டி விடப்படுகிறார்கள். இன்று வெளி உலகத் தொடர்பு எந்த நண்பர்கள் மூலமாகவும் இல்லை; பத்திரிகைகள் மட்டும்தான். இன்றைய பத்திரிகையில், பண்டித ஜவஹர்லால் நேருவின் சென்னைப் பேச்சு பெரிய அளவில் இடம்பிடித்துக் கொண்டிருந்தது: அவரே கூட பத்திரிகையாளரின் கூட்டத்தில் இந்த போக்கைக் கண்டித்திருந்தார். பண்டிதரின் பேச்சை பத்திரிகைகள் எப்படிப் பெரிய அளவிலே வெளியிடாமலிருக்க முடியும்! தி. மு. கழகக் கிளர்ச்சியைக் கண்டித்துப் பேசினாரே! வழக்கமான கண்டனந்தான் — வார்த்தைகள் கூடப் புதிது இல்லை — சிறுபிள்ளைத்தனம்—கேலிக்கூத்து இவை போல தான். ஒரு நாட்டு மக்களின் மனதை வெகுவாக வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் மொழிப் பிரச்சினை பற்றிக் காட்டவேண்டிய அக்கறையும் கொள்ள வேண்டிய பொறுப்புணர்ச்சியும் அவருடைய பேச்சிலே மருந்துக்கும் இல்லை. அரசியல் சட்டத்தை எரித்தால் பிரச்சினை தீர்ந்து விடுமா? என்று கேட்டிருக்கிறார் பிரச்சினை அதனால் தீர்ந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு தி. மு. க கிளர்ச்சி துவங்கவில்லை இந்தியை ஆட்சி மொழி ஆக்குவது குறித்து இங்கு நாம் எவ்வளவு மனக்கொதிப்பு அடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதே கிளர்ச்சியின் நோக்கம். இதனைப் பல கிளர்ச்சிகளை நடத்திய பண்டிதர் தெரிந்துகொள்ளாமலா இருக்க முடியும்? அதிகாரப் பேச்சுப் பேசி இருக்கிறார், வேறென்ன கூற முடியும்: பயப்படாதீர்கள்! அநீதி நடக்காது: என்று தைரியம் கூறி இருக்கிறார். தான் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பதாக அடித்துப் பேசி இருக்கிறார்,

தம்பி! அவர் கொடுத்த வாக்குறுதி ஆங்கிலத்தை அகற்றமாட்டேன் — இந்தி பேசாத மக்களுடைய சம்மதம் பெறாமல் இந்தியை ஆட்சிமொழி ஆக்கி விடமாட்டேன் — இந்தி ஆட்சி மொழி ஆக்கிவிடமாட்டேன் — இந்தி ஆட்சிமொழியாக வேண்டுமா வேண்டாமா என்டதைத் தீர்மானிக்கும் உரிமையை இந்தி பேசாத பகுதி மக்களுக்கே அளிப்பேன் — என்பதாகும்.

இது அறநெறி அரசுமுறை. நேருவின் புகழ் நிலைக்குப் பொருத்தமான முறை— ஆனால் எங்கே அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது? 1965லிருந்து இந்திதானே ஆட்சி மொழி! சட்டம் அப்படித்தானே சொல்லுகிறது? அதிலிருந்து பத்து வருட காலம் ஆங்கிலத்தைச்சில காரியங்களுக்குட பயன்படுத்தலாம்! அதுதானே பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டம்!

பண்டித நேரு தந்த வாக்குறுதி அவருடைய துரைத்தனம் நிறைவேற்றிய சட்டத்திலே சாகடிக்கப்பட்டுவிட்டிருக்கிறது.

இதனைச் சுட்டிக்காட்டியவர்கள் பலர் —இங்கு உள்ள இதழ்களில் அநேகமாக எல்லா இதழ்களுமே இதனைச் சுட்டிக் காட்டின ஆனால் சென்னைப் பேச்சிலே அவர் அடித்துப் பேசினார். 'என் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டேன்' என்று: சரியா நியாயமான பேச்சா!

இவரே, பாராளுமன்றத்திலே முன்பு பேசும்போது, நான் வாக்குறுதி கொடுத்தது உண்மை எப்போதும் அதனை மறுக்கவில்லை. ஆனால் என்வாக்குறுதியை ஒரு சட்டத்திலே எப்படி இணைக்க முடியும்?'' என்று கேட்டார். ராஜ்யசபையில் சாப்ரு எனும் மூதறிஞர் அந்த வாக்குறுதியை ஏதாவதொரு முறையில் சட்டத்திலே இணைத்திருக்கலாம்—முடியும்— செய்திருக்க வேண்டும் என்று கூறினார் அவர் காங்கிரஸ் உறுப்பினர்.

இதனை எல்லாம் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். என்றாலும், சென்னையிலே பண்டிதர் பேசுகிறார், என் வாக்குறுதி நிறைவேற்றப் பட்டுவிட்டது என்று, பெரியவர்கள் இதுபோல, உண்மைக்கு மாறாகப்பேசும்போது திகைப்புதான் ஏற்படுகிறது

நாட்டுப் பிரிவினையை நாம் விட்டு விட்டதற்காகவும். நமதுகழகச்சட்டதிட்டத்தைத் திருத்தி அமைத்திருப்பதற்காகவும். மகிழ்ச்சி தெரிவித்துப் பேசிவிட்டு இது போதாது மனம் மாற வேண்டும்! இதயம் மாறவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்: மனுக்கள் குப்பைக் கூடைக்குப்போகும்! நியாயங்கள் மறுக்கப்படும்; — ஆனால் மனம்-மாறவேண்டும்! எந்த விதமான நீதியோ எனக்குப் புரியவில்லை!

பண்டித நேருவின் சென்னைப் பேச்சு ஒரு பெரியநாட்டு ஆட்சித்தலைவர், நாட்டிலே எழுந்துள்ள பிரச்சினையை அலசிப் பார்த்துப் பேசும் முறையில் அமையவில்லை— ஒரு கட்சித் தலைவருடைய கண்டிப்பான பேச்சாக—அதிலும் ஆட்சியில் இருக்கிறோம். என்ற உணர்வுடன் உள்ள ஒரு கட்சித் தலைவரின் பேச்சாகவே அமைந்திருந்தது.

நாளைய தினம் மறியல் என்ன முறையைச் சர்க்கார் கையாள இருக்கிறதோ தெரியவில்லை. இன்று இரவு எனக்கெங்கே தூக்கம் வரப் போகிறது! இதே நினைவாகவே இருக்கும். மறியல் நடத்தவிடுவார்களா? கைது செய்வார்களா? அடித்து விரட்டுவார்களா எதையும் சொல்வதற்கில்லை. ஏனெனில் காங்கிரஸ் சர்க்காரின் போக்கு எந்த இலக்கணத்துக்கும் உட்பட்டதாக இல்லை — சொச்சையாகப் பேசிக்கொள்வார்களே, சித்தன் போக்கு சிவன் போக்கு என்று, அதுபோல இருக்கிறது.

அண்ணன்

அண்ணாதுரை

('காஞ்சி' 4—10—64 எழுதியனுப்பியவர் காரைக்குடி சாமி திராவிடமணி.)

தமிழா! உன் உணர்ச்சி காட்டு!

—ஓடைப்பட்டி சுப்பையா—

இலங்கியங்கள் இலக்கணங்கள் தமிழினத்தின்
இருவிழிகள்; ஒளித்தம்மே; இந்த நாட்டை
அலங்கரிக்கும் ஆட்சிமொழி யாக வேண்டும்.
அப்போது தானிங்கு சுதந்தி ரத்தாய்
நலங்குன்று திருக்கின்றாள் என்ப தாகும்!
நாள்தோறும் அதிகார நெருப்பை நீட்டும்
விலங்குமொழி இந்திமட்டும் ஆட்சி தன்னில்
வீற்றிருப்பின் இந்நாடு சிதையக் கூடும்
முடிசாயாத் தமிழினத்தின் ''எதிர்ப்பு''க் கோலால்
முழங்கால்கல் முட்டிவிழ இந்திக் கள்ளி
அடிவாங்கி அடிவாங்கிச் சோரம் போயும்
''அதிபதிநான் ஈரேழு மொழிக்கும்'' என்று
பிடிவாத நோய்கொண்டு நினைக்கு மானால்
பிறப்பறையின் கருவறைக்கே கத்தி வைத்துக்
குடியோங்கி வரும்நாட்டின் ஒருமைப் பாடு
கடுநோயில் வாடுமென்ப துறுதி யாகும்!
பெரியாரின் தடிவிரைந்து தாக்கித் தாக்கி
பேச்சின்றி மூச்சின்றி படுத்த இந்தி!
அரியதமிழ் நாகரிகம் அத்தனையும்
அள்ளிவரும் அண்ணாவின் 'நா' விடுத்த
கருக்கரிவாள் கருத்துரையால் சாய்ந்த இந்தி!
கலைஞர்க்கோ புறப்பாட்டாம் எழுது கோலின்
எரியீட்டி விளுச்சூடு வாங்கி வீழ்ந்த
இந்திக்குப் பதவி ரத்தம் செலுத்து கின்றார்!
எங்கெங்கோ நுழைந்து வரும் இந்திக் கிங்கே
எரியூட்டத் தமிழ்த் தலைவன்! நாட்கு றிட்பான்
தங்கத்தேர் தமிழகத்துச் சிங்கக் கூட்டத்
தனித்தலைவன் கருஞ்சட்டை ஊர்வ லத்துக்
கங்கையிலே மிதக்க விட்டான் துக்கத் தோணி!
பொங்கியெழ வெள்ளோட்டம் காட்டி விட்டான்.
செங் கரும்பு பெண்டு பிள்ளை சுற்றத் தோடு
பங்கெடுத்து மொழி காக்க எழுச்சி கொள்க!
மஞ்சத்துச் சுகக்கலையின் நாடகத்தை
மடி தடவித் தாளமிடும் ஊடல் கூத்தை
கொஞ்சம் நீ ஒத்தி வைத்தே இந்திக் கிங்கே
குடம் உடைத்துக் கொள்ளி வைத்துத் திர மட்டும்
நெஞ்சிலெழும் சுக நினைவை கட்டிப் போடு!
நெருங்கிவரும் ஆசைகளை நெருப்பில் போடு!
தஞ்சமென வந்தவனை ஆதரித்துத்
தத்தளிக்கும் தமிழா! உன் உணர்ச்சி காட்டு!

வன்முறைகளைத் தவிர்க்கா விடில்...

இன்று ராதாபுரத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்திருக்கிறேன். இந்தக் கொடி நிழலில் நிற்கிறபொழுது இந்தக் கொடிக்காக இரத்தம் சிந்தியவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் என்பதை—வன்முறையின் மூலம் தி. மு. கழகத்தைஅழிக்கநினைக்கும்வஞ்சக எம். ஜி. ஆர். கட்சிக்காரர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

நான் காரில் வந்தபொழுது ஒரு கூரான உளியைக் கொண்டு என்னை நோக்கித் தாக்கினார்கள். நல்ல வேளையாக முகத்திற்கு நேராக வந்த அந்த உளி நான் தலையை குனிந்ததும் தலைக்குமேலே சென்றுவிட்டது. ஒருவேளை மண்டையில் அடிபட்டிருந்தால் மண்டைஎலும்பு உடைந்திருக்கும், அல்லது கண்களிலே பட்டு இருந்தால் முகத்தில் பட்டிருந்தால் கண் ஊனமடைந்திருக்கும்.

இப்படித் தாக்குதல்நடத்திவிட்டால்உடனே, தி. மு. கழகத்தைக் கலைத்துவிடும் கோழைகள் அல்ல நாங்கள். அ. தி. க. வி. னர் இப்பொழுது எதையும் செய்யலாம். எதைச் செய்தாலும் அவர்களைக் கேட்பதற்கு இப்பொழுது நாதியில்லாது போய்விட்டது. போலீஸ்காரர் அவர்களை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்ற அளவிற்கு இப்பொழுது கடந்த இரண்டுஆண்டுக்காலமாக நிலைமை இருக்கிற காரணத்தால்தான் இந்த வன்முறைகள் பெருகியிருக்கின்றன. இப்படிப்பட்ட வன்முறைகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு முதலமைச்சராக இருக்கும் எம். ஜி. ஆரையே சாரும்.

தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட அமளிகள், வன்முறைகள் எம். ஜி. ஆர். கட்சியினரால் தொடர்ந்து நடத்தப்படுமானால் ஐந்துஆண்டுக் காலத்திலோ ஆறு ஆண்டுக்காலத்திலோ முடிய வேண்டிய ஆட்சி இடையிலேயே முடிந்துவிடும் நிலைமை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்'

இந்தப் பகுதியைச் சேர்ந்த கழக நண்பர்கள் இப்படிப்பட்ட தாக்குதலை நடத்தியவர் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் தகுந்த நடவடிக்கை எடுக்கும்என்று எதிர்பார்க்கிறோம். அப்படி தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் என்ன செய்யலாம் என்பது தலைமைக் கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்படும்...

நான் எம். ஜி. ஆருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன. நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வன்முறைகளைத் தடுக்கப் போகிறீர்களா? அல்லது கழகத் தோழர்களேதான் அதை சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா? அப்படியானால் அதற்கும் கழகத் தோழர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இந்தக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—தலைவர் கலைஞர்

(இராதாபுரப் பொதுக்கூட்டத்தில்)

அண்ணன் நெறிகாப்போம்! அண்ணன் புகழ் வளர்ப்போம்!

பிப்ரவரித் திங்கள் 3 ம் நாள்!

நம் இதய தெய்வம்' அறிஞர் அண்ணு அவர்கள் நினைவு நாள்.

கோடிக்கணக்கான இதயங்கள் பதறித் துடித்து கதறி அழ —

நம்மையெல்லாம்விட்டு நீள்துயில்கொள்ள புறப்பட்ட நாள்.

தமிழகமே கண்ணீர் விட்டு கதறி அழுத நாள்

நாடெங்கிலும் கதறியவர்கள் — கண்ணீர் விட்டவர்கள் — கலங்கியவர்கள் ஏராளம்!

உலகம் கண்ட சமதர்மவாதி
இந்தியாவின் பண்பாட்டு ஆசிரியன்
தமிழகத்தின் தகைமைசால் முதல்வர்
கழகத்தின் வழிகாட்டி
கருணை தெய்வம்
கண்ணியக் கடவுள்
பண்பாட்டுத் திலகம்
தமிழ் காத்த வீரன்
பொறுமையில் புத்தன்
வீரத்தில் விவேகத்தில் அசோகன்
எழுத்துலகில் அறிஞர்
தமிழர்களின் உடன்பிறந்த அண்ணன்

சமுதாயத்திலே சமத்துவம் —
பொருளாதாரத்திலே சமதர்மம் —
அரசியலிலே சனநாயகம்
இது அண்ணன் அமைத்திட்ட பாதை!

கடமை —
கண்ணியம் —
கட்டுப்பாடு —
இது அண்ணன் வழங்கிய கட்டளை!

அன்பு —
அறம் —
அமைதி —
இது அண்ணன் சொல்லிய நீதிமுறை!

மாற்ருன் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்!
கத்தியைத் தீட்டாதே — புத்தியைத் தீட்டு!

மறப்போம் — மன்னிப்போம்!
யாதும் ஊரே யாவரும் கேளிர்!
ஒன்றே குலம் — ஒருவனே தேவன்!

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்! இவையெல்லாம் அண்ணன் அளித்திட்ட படைக் கலங்கள்!

இதய தெய்வமாம் பேரறிஞர் அண்ணு அவர்களின் ஆணைப்படி — அறிவுரைப்படி அவர் யாத்த கொள்கைப்படி ஏறு நடை போடுவோம்.

"ஏழை சிரிக்கும்வரை ஓயமாட்டேன்" என்ற அண்ணனின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் ஓடி ஓடி உழைக்கும் கலைஞர் அவர்களின் உத்தரவுக்குக் காத்திருப்போம்;

உறவுக்குக் கைகொடுப்போம்!

உரிமைக்குக் குரல் கொடுப்போம்!

அண்ணு வழியில் அயராது உழைப்போம்!

நெய்வேலி ஜி. சுப்பிரமணியம்

ஆதிக்கமற்றச் சமுதாயம் அமைப்போம்!

வன்முறைத் தவிர்த்து வறுமையை வெல்வோம்!

மாநிலத்தில் சுயாட்சி — மத்தியில் கூட்டாட்சி காண குரல் கொடுப்போம்!

இந்தி ஆதிக்கத்தை என்றும் எதிர்ப்போம்!

அனைத்து மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக்க குரல் கொடுப்போம்!

இந்தி எதிர்ப்புக் கனல் அணையாமல்

பாதுகாத்து வளர்த்திட உறுதி ஏற்போம்

தமிழ் மண்ணை மாற்ருனுக்கு விலை பேசத் துணிந்த கங்காணிகளுக்கு

காலத்தை நிர்ணயிக்க சருணைவடிவமாம் அண்ணு வழியில் புத்தி புகட்டிட புறப்பட்டது காண் சிங்கக் கூட்டம்,

அழிந்துவிட்டது கழகம் என்று ஆர்ப்பரித்தவரையும் —

ஒழிந்து விட்டது கழகம் என்று ஓலமிட்டவரையும் —

புரட்டர்களையும் போலி வேடதாரிகளையும் புறமுதுகிட்டு ஓட்டிட புறப்பாட்டுபாடி தமிழ்ச் சமுதாயம் புறப்பட்டு விட்டது.

மானம் காக்கும் மாணவர்கள் நாங்கள்!

கழக அரசின் நேசக் கரத்தால் நிம்மதியாக வாழ்ந்த நெசவாளர்கள் நாங்கள்.

கழக அரசால் வலிமையும் பாதுகாப்பையும் ஒருங்கே பெற்ற தொழிலாளர்கள் நாங்கள்

விதையாலும் உரமாலும் விவசாயக் கடனாலும் கருவியாலும் காலமறிந்து கடன் கொடுத்து உதவிய கழக அரசின் நன்றியுள்ள விவசாயிகள் நாங்கள் — என்று புறப்பட்டு விட்டார்கள் நாடெங்கிலும்.

அவர்களின் எழுச்சி நாடெங்கிலும் எதிரொலிக்கிறது அவர்களின் முழக்கம் மாநிலமெங்கும் கேட்கிறது! அந்த உத்வேகமும் உணர்வும் புதிய ஆட்சி மலர்ந்திட அதுவும தமிழராட்சி மலர்ந்திட வழிவகுக்கிறது.

ஏழைக்கு உழைப்பதில் எந்தமிழைக்காப்பதில் எம் அண்ணன் கொள்கையை நிறைவேற்றும் முயற்சியில்துரோகிகளால் எத்தனை இன்னல்கள் வரினும் இழப்புகள் தோன்றிடினும் கட்டபொம்மன்போல் சாவுக்கஞ்சாது சரித்திரம் படைப்போம் — எட்டப்பன் போல் எச்சில் இலைக்கு ஏங்க மாட்டோம் என்ற உறுதியினை ஏற்போம்.

அண்ணன் அமைத்திட்ட கழகத்தை —

அண்ணன் ஏற்றிவிட்ட இருவண்ணக் கொடியை —

அண்ணன் அளித்திட்ட உதயசூரியன் சின்னத்தை காப்போம்

'ஊனம்வரின்' உயிரைத் தரவும் அஞ்சோம் என அண்ணன் நினைவுநாளாம் இந்நாளில் சூளுரை ஏற்போம்.

★

சீனுவில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டு!

மார்கோ போலோ போன்ற துணிவுள்ள ஐரோப்பியப் பயணிகளைப்பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கிருேம்.

ஆனல் அப்படிப்பட்ட புகழ் பெற்ற இந்தியப் பயணிகளைப்பற்றி நாம் கேள்விப்படவில்லையே ஏன்? இப்படி கேள்வியை எழுப்புகிருர் டி. என். சுப்பிரமணியம் எனும் ஆராய்ச்சியாளர்

சீனுவின் மத்தியில் தமிழர் குடியிருப்பு இருந்ததாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று சான்று கூறுகிறது.

சீனுவின் துறைமுக நகரமான சௌவன்சௌ என்னுமிடத்தில் ஹாங்காவிற்கு வடக்கே புதை பொருளாக அந்தத் தமிழ்க் கல்வெட்டு தோண்டி எடுக்கப்பட்டது.

பண்டைக் காலத்தில் தென் இந்தியாவிலிருந்து வணிகக் கப்பல் சௌவான் சௌ நகரத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தன.

மார்கோபோலோ வருகைக்கு முன்பே தமிழ் மாலுமிகள் இந்திய — சீனு கடல்வழியில் பயணம் செய்வதில் புகழ் பெற்றவர்களாக விளங்கி வந்திருக்கிருர்கள்.

பதின்மூன்ரும் நூற்ருண்டின் பிற்பகுதியில் மார்கோ போலோ சீனத்திற்குச் சென்ருர், சினுவுக்கு தமிழகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சௌவன்சௌ துறைமுகத்தில்இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் அளவு மேற்கத்திய நாடுகளுக்காக அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் அளவைவிட நூறுமடங்குக்கு மேலே இருக்கும் என்கிருர் மார்கோ போலோ.

சீனுவுக்கு கடல்மார்க்கத்தைக் கண்டுபிடித்த அந்த முதல் தமிழன் யார்?

யார் அந்தத் தமிழ்க் கொலம்பஸ்? எந்த விதக் கப்பலைச் செலுத்திச் சீனுவை அடைந்தான்? அது வியப்புக்குரிய ஒன்ருகவே விளங்குகிறது.



கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் சீன மொழியும் தமிழ் மொழியும் பொறிக்கப்பட்டுள்ளதை மேலே காண்க.

நெஞ்சில்தேக்கியநீங்காநினைவு!

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரின் போர்ப்பரணி தமிழகத்தின் திக்கெட்டும் ஒலித்தது:

தமிழினத்தின் எதிர்கால காலமும், தமிழகத்தின் வருங்கும் நிர்ணயிக்கின்ற நாளாக ஜனவரி 26 நிகழ்ச்சி அமைந்தது

தமிழ்நாட்டின் வரலாறே புதுப்பிக்கப்பட இருக்கிறது. அதற்கு ஒரே வழி,

"தமிழ் மொழியும் நடுவண் அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் - இந்திக்கு மட்டும் வளர்ச்சிக்கான தனிச் சலுகைகள் அளிப்பதை நிறுத்தி எல்லா மொழிகளுக்கும் சமத்துவம் வழங்கிட முன்வரவேண்டும்; இந்தி ஆதிக்கத்திற்கு உடன்பட்டுத் தமிழர்கள் இரண்டாந்தரக்குடிமக்களாக வாழவேண்டுமென்கிற நிலையை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள இயலாது!

ஏற்றுவோம் கறுப்புக்கொடிகளை! நடத்துவோம் ஊர்வலங்களை! இந்த இனிய வாசகங்களை உடன் பிறப்புக்களுக்கு கடிதத்தில் தீட்டினார் கலைஞர்.

தி. மு. கழகத் தோழர்கள் மட்டுமல்ல; தமிழர்களே கலைஞர் அவர்களின் உடன் பிறப்புக்கள் அல்லவா!

எனவே தமிழகத்தின் பட்டிதொட்டிகளிலும், பட்டணங்களிலும் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் தங்கள் இல்லங்களில் கறுப்புக்கொடியை ஏற்றினார்கள் ஜனவரி 26 இல். இயக்கத்தைச்சார்ந்த தோழர்கள் மட்டுமல்ல தமிழ உணர்வு தழைக்கும் நெஞ்சங்களெல்லாம் அஞ்சாமல் கறுப்புக்கொடியினை தங்களது இல்லங்களில் ஏற்றி பறக்க விட்டன.

தமிழ்த் தலைவர் கலைஞரின் ஆணைப்படி கருஞ்சட்டை அணிந்தவர்களும், கறுப்புத் துண்டினை தோளில்போட்டுக் கொண்டிருந்தோரும் கையில் கறுப்புக் கொடியுடன் தந்தை பெரியார் நினைவிடத்தில்குழுமிகொண்டிருந்தனர்.

கூடியிருந்தோர் அனைவரும் கறுப்புக்கொடியினை ஏந்தியபடி தங்களுடைய தலைவனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்து காத்துக்கொண்டிருந்தனர்.

பெரியார் திடலில் பெருங்கூட்டம் நிரம்பியதுபோக ரண்டால்சாலையும் அடைத்து நிற்க,பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பெரும் கூட்டம் வெள்ளம் போல் காட்சியளித்தது.

சென்னை மாநகரம் இருவண்ணக் கொடிகளுடன் லட்சக்கணக்கான தொண்டர்கள் கலந்துகொண்ட எத்தனையோ ஊர்வலங்களைக் கண்டு களித்திருக்கிறது.

எவர் தமிழினத்தின் வாழ்வுக்காகவும் அவர்தம் வளத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறாரோ அந்தத் தியாகத்தலைவர் கருஞ்சட்டை அணிந்து கறுப்புத் துண்டைத் தன் தோளில் போட்டுக்கொண்டு கடும் உழைப்பின் காரணத்தால் உடல் களைத்திருந்தாலும் உள்ளத்தில் எழுச்சி பொங்க உற்சாகத்தோடு பெரியார் திடலுக்கு வந்தடைந்தார்.

கூடியிருந்த இலட்சக் கணக்கானவர்கள் தங்கள் தலைவனைக் கண்டதும் கரை காணா களிப்புக் கொண்டனர். கர ஒலி எழுப்பினர். கலைஞர் வாழ்க என வாழ்த்தொலி முழங்கினர்.

கலைஞர் வாழ்க! கலைஞர் வாழ்க!

என எழுந்தமுழக்கம் அலைமோதிக்கொண்டிருந்த கூட்டத்திலிருந்து வானைப் பிளந்தது

இந்தி எதிர்ப்புப்போரைத் தொடர்ந்து நடத்தி வெற்றி கண்டு வந்த தந்தை பெரியார் நினைவிடகதில் தமிழினத் தலைவர் கலைஞர் மலர் வளையம் வைத்து வணங்கினார். பின்னர் ஊர்வலத்திற்குத் தலைமையேற்கவும், - நகர்ந்தது ஊர்வலம்.

உலகில் இதுவரைநதிகளே கடலில் கலந்து கொண்டிருந்தன. ஆனால் அன்றோ கடலே நதியை நோக்கிப் பாய்ந்து கொ டிருந்தது. ஆம்! திடலில் இருந்த பெருங்கூட்டம் வீதியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

ஆர்வமிக்க இளைஞர் சிலர் அண்ணா அறிவாலயத்திற்கு முன்னேற்பாடாக தூது

லெனின்

அனுப்பிக் கொண்டிருந்தனர். கறுப்புத் துண்டுகளை பலூன்களில் வானை நோக்கிப் பறக்க விட்டனர்

வானத்துக் கருமேகக் கூட்டந்தான் வையத்தைக்காண்பதற்கு வந்து இறங்கியதோ என்று வியக்கும் வண்ணம் கருஞ்சட்டை கூட்டம் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

விலாச்கோலமாக அன்று இருக்கவேண்டிய வீதிகளோ இந்தி ஆதிக்கஎதிர்ப்புக்காரணமாக அன்றைய தினம் கறுப்புக்கொடிகளை மட்டுமே ஆபரணமாக அணிந்து கொண்டிருந்தன

என்றும் ஒளிவிட்டுக்காட்சியளித்த ஊர்வல வீதிகளோ அன்று மட்டும் கறுப்புக்கொடி தோரணங்களால் பகல் கூட இரவாகிக்காட்சியளித்தது.

வெள்ளம்போல் தமிழர் கூட்டம் அன்று உள்ளத்தால் ஒருவராகி உடலினால் பலராய் ஆங் வீறுநடை போட்டுக் கொண்டிருந்தது.

"இந்தி ஆதிக்கம் ஒழிக" மத்திய அரசே! தமிழையும் ஆட்சிமொழி ஆக்குக! என்ற முழக்கங்களை லெட்சியகீதமாக இசைத்துக் கொண்டிருந்தனர்

"இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க உத்தரபிரதேசத்திற்கோ, பீகாருக்கோ, மத்திய பிரதேசத்திற்கோ படை கொண்டு செல்லவில்லை.

ஆனால் இந்தி தமிழகத்திலே நுழைந்து நம்மை ஆதிக்கம் செலுத்த வருகிற நேரத்தில் அதை உள்ளே நுழையாதே என்று தடுக்கிறோம்; எதிர்க்கிறோம்.

உயிருக்கு நேரான தமிழை அழிக்க யாராவது முற்படுவார்களேயானால் என் தாய் தடுத்தாலும் விடேன்...

அதற்கென கிடைப்பது சிறைச்சாலையாக. இருந்தாலும் சித்ரவதையாக இருந்தாலும், தூக்குமேடையாக இருந்தாலும் அந்தக் களச்சாவை நாங்கள் யாசித்தும் பெறுவோம் என்று முழக்க மிடுகின்றவன் தரன் மானம் உள்ள தமிழன். மறத்தமிழன்.

குருதி கொதிக்க, நரம்பு புடைக்க, கண்கள் சிவக்க, நெஞ்சை நிமிர்த்தி மொழிப் போர்ப் பட்டாளம் எழுந்து நின்று. எதற்கும் தயார்! தயார்! என்று கையை உயர்த்தி முழக்கமிட்டது!

திருச்சி மாநாட்டுத் தீர்மானத்தை முன்மொழியும் வகையில் சுருக்கிப் படிக்கிறார் தன்மானத் தலைவர்.

அலைமோதிக் கொண்டிருந்த மாபெரும் கூட்டம் தலைவர் கொண்டுவந்த தீர்மானத்தைத் தட்டாமல்ஏற்றது. கரவொலிஎழுப்பிவழிமொழிந்தது

கலைஞர்: இந்தி ஆதிக்கம்...
மக்கள்: ஒழிக!
கலைஞர்: தமிழையும்...
மக்கள்: 'மத்திய ஆட்சி மொழியாக்குக'
கலைஞர்: நமக்கு இந்த எழுச்சியை உருவாக்கிய தந்தை பெரியார்...
மக்கள்: வாழ்க!
கலைஞர்: நமக்குஇந்தஎழுச்சியை உருவாக்கிய பேரறிஞர்அண்ணா
மக்கள்: வாழ்க!
கலைஞர்: தமிழ் காக்க உயிர்நீத்தஉத்தமர்கள் புகழ்...
மக்கள்: ஓங்குக

என்பத் தமிழ் காக்கும் இனிய தலைவர் இயக்கத்தை நடத்திச் செலுத்தும் ஈடற்ற தலைமைகண்டு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் "டாக்டர் கலைஞர் வாழ்க!" என முழக்கமிடுகின்றனர்.

நிகழ்ச்சி முடிகிறது. நெஞ்சில் தேக்கிய நீங்காத நினைவோடு எதற்கும் அஞ்சாத இலட்சியக்கூட்டம் வீரஉணர்வோடு வெற்றிக்களிப்போடு இல்லம் நோக்கி பீடுநடை போட்டனர்.

ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்றனர்

பாட்டாளித் தோழர்கள், மாணவச் செல்வங்கள், குடிசைவாழ் மக்கள், மகளிர் குலம், இலக்கிய அணியைச் சார்ந்தவர்கள், நடுத்தர மக்கள் இன்னோரன்ன பல துறையைச் சார்ந்தவர்களும் பங்கு கொண்டனர்.

திராவிடர் கழகமும், குடியரசுக் கட்சியும் இந்தக் கறுப்புக்கொடி ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

ஊர்வலம் செல்லும் இரண்டு பக்கங்களிலும் மக்கள் கூட்டம் தமிழினத் தலைவரைக் கண்டு வணங்கி நின்றனர். வாழ்த்திச் சென்றனர்

மாநகரைக் குலுக்கிய அந்த மகத்தான ஊர்வலத்தின் மகிமையை — டில்லி எஜமானர்கள் கேட்டறிந்து அதிர்ச்சி அடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தி ஆதிக்கத்தால் ஏற்படும் இன்னலை. இடுக்கண்களை எண்ணி டில்லி பாதுஷாக்கள் நிச்சயம் திகில் அடைந்திருப்பார்கள்.

உணர்ச்சியும், எழுச்சியும் மிக்க ஊர்வலம் கடைசியாக அண்ணா சாலையிலே ஊர்ந்துவந்தபோது அகண்ட காவிரியாகக் காட்சியளித்தது.

போக்குவரத்துக்கு விடுமுறை விட்ட அண்ணாசாலை அன்று பொங்கியெழுந்த தமிழர் படைக்கு வரவேற்பு வாசித்தளித்தது.

அண்ணா பாலத்தின் நடுவில் ஊர்வலத்தின் முற்பகுதி அடைந்தபோது தமிழினத் தலைவர் பின்னோக்கிப் பார்க்கிறார். ஆம்! அது அரிமா நோக்கு அல்லவா!

ஊர்வலத்தின் பிற்பகுதி கண்ணிற்குத் தெரியாத காட்சியாக விளங்கியது. உணர்ச்சி வடிவமான அந்த ஊர்வலத்தின் மாட்சியை உணர்ந்த தலைவர் முகத்தில் ஒருகணம் புன்னகை மின்னல் பளிச்சிட்டு மறையத்தான் செய்தது.

அண்ணா அறிவாலயத்தை அடைகிறது ஊர்வலம்.

தமிழினத் தலைவர் வானை முட்டி பறந்து கொண்டிருந்த இருவண்ணக் கொடியின் கீழே மேடையில் வந்து நிற்கிறார்.

இலட்சக்கணக்கான மக்கள் தலைவனை மீண்டும் ஒலி பெருக்கியின் முன்னாலே பார்க்கிறார்கள். அவரது சங்கீதக் குரலைக் கேட்க ஏங்கித் தவிக்கிறார்கள். அவரது ஆணையை ஏற்று புதிய வரலாற்றைப் படைக்கப் புறநானூற்று வீரர்கள் புடைசூழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்புகிறார் கலைஞர். உணர்ச்சிமிக்க வீரவுரை ஆற்றுகிறார். கூடியிருப்போர் எழுச்சி பெற்று எக்காளமிடுகிறார்கள் "எங்கே பகைவர்கள் என்று!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். கலைஞர் இரண்டு நாட்களிலும் ஐம்பதுக்குமேற்பட்ட கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறார். காலையில் தொடங்கி இரவு ஒரு மணி வரை தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கு கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல.

ஓயாத இந்தப் பொதுப் பணியில் ஈடுபட அவருக்கு உடல் ஒத்துழைக்க மறுத்தாலும் உறுதியான உள்ளம் படைத்திருக்கிற காரணத்தால் எறும்புபோல் என்றும் சுறுசுறுப்பாகவே பம்பரம் போல் சுழன்று பணியாற்றுகிறார் எதிரிகள் கொலை செய்ய முயன்றாலும் கொள்கை வீரர் ஆகையினால்ஏற்றுக் கொண்ட பணியில் எள்ளளவும் தொய்வு ஏற்படுவதில்லை.

அமைப்புச் செயலாளர் தென்னரசு அவர்களும், வை. கோபால்சாமி எம். பி. அவர்களும் நெல்லை, குமரி மாவட்ட சுற்றுப்பயணத்தில் கலைஞரோடு சென்றிருக்கிறார்கள்.

சூறாவளிச் சுற்றுப்பயணத்தைமேற்கொண்டு கழகக் கொள்கை எடுத்துரைக்கும் கலைஞரைக் காணும் சிலருக்குக் காழ்ப்புணர்ச்சி வந்துவிடுகிறது. பொது மக்கள் திரண்டு வந்து அவரது உணர்ச்சிமிக்க பேருரைக் கேட்க இலட்சக்கணக்கில்கூடுகிறார்களே என்பதில் சிலருக்கு அச்சத்தையும் ஆயாசத்தையும் அளித்து விடுகிறது.

ராதாபுரம்நோக்கி தலைவருடைய கார் சென்று கொண்டிருக்கிறது.

அ. தி. மு. கவைச் சேர்ந்த கொலை வெறியன் ஒருவன் ஐந்து அங்குல நீளமுள்ள இரும்பு உளி ஒன்றை காரை நோக்கி வீசுகிறான், முன் கண்ணாடி உளிபட்டு தூளாகிறது

அந்த உளி தலைவரை நோக்கிப் பாய்ந்தபோது தலைவர் குனிந்து கொண்ட காரணத்தால் தலைவருக்குப் பின்புறம் இருந்த கண்ணாடியில் உளிபட்டுத் தெறித்து அந்தக் கண்ணாடியும் உடைபட்டது

கடந்த இரண்டு ஆண்டு காலமாகவே தமிழ்நாட்டில் சட்டமும், ஒழுங்கும் செத்த நிலையிலே உள்ளன காவல் துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் தாம் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாகவே தனக்குப் பாதுகாப்பும் கொலைவெறி பிடித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி வேண்டியும் காவல்துறை நடவடிக்கை எடுக்காது படுகொலைக்கு வழிவிட்டு விட்டனர்.

கழகப் பேச்சாளன் இளம் பிஞ்சு நெடுஞ்செழியன் ஆட்சியைப் பற்றிச் சூடாக விமர்சித்தான் என்பதற்காகவே கொலைவெறி பிடித்த குண்டர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்துவிட்டனர். இதுவரை முறையாக நடவடிக்கை எடுத்துக் கொலையாளிகளைப் பிடிக்கவில்லை

திருவள்ளூர் அருகில்உள்ள புட்லூர் தண்டபாணியை ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பட்டாபிராமன் ரெளடிகளை வைத்து கொலை செய்துவிட்டார் என்று மறைந்தவருடைய மனைவியே அரசுக்கு மனுக்கொடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இந்திராநகர் பிரேமா படுகொலை செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரையில் குற்றவாளியைக் காவல்துறை கண்டு பிடிக்கவில்லையே!

இந்தச் சம்பவங்களையெல்லாம் எண்ணிப் பார்த்துத் தான் ராதாபுரத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில்

'நான் எம். ஜி ஆருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுத்து வன்முறைகளை தடுக்கப் போகிறீர்களா? அல்லது கழகத் தோழர்களேதான் அதைச் சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா;

அப்படியானால் அதற்கும் கழகத் தோழர்கள் தயாராக இருக்கிறார்கள்' என்று ஆவேசத்தோடு அதே சமயத்தில் அடக்கத்தோடும் அரசுக்குத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்- 13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது. நிர்வாக அலுவலகம் 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை—600018
தொலைபேசி: 441009

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சனவரி 26 ல் சென்னையில் அலையெனத் திரண்ட மக்கள் வெள்ளம்!